ஓம்
திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு கஉ	மெய்கண்டான் யாண்டு-எகக கார்த்திகைத் திங்கள் 1933ளு நவம்பர்மீ—டிசம்பர்மீ	பரல் ச

திருவாசகம்

உற்ற வாக்கையி லுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு ளப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொற் றெளியாமே
அத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே.

பதவுரை:—

நறுமலர் எழுதரு நாற்றம்போல்—மணம் பொருந்திய பூவின்கண் உண்டாகிற மணம்போல

உற்ற ஆக்கையில் உறுபொருள்—நான் முற்பிறப்புக்களிற் செய்த வினையின் பயனாக எனக்குக் கிடைத்திருக்கிற இந்த உடலில் உள்ளும் புறமும் நிறைந்திருக்கிற பொருளாயும்

பற்றல் ஆவதோர் நிலையிலாப் பரம்பொருள்—அவ்வாறு உடலில் நிறைந்திருப்பினும் அந்த உடலை அதுவதுவாய் நின்று பற்றாமல் அதனை விட்டு நீங்கி வேறாயிருக்கின்ற மேலான பொருளாயும் சிவனிருக்கின்றான் (என்று நான் அருள்நூல் அறிவினால் அறிந்திருக்கிறேன்.)

அப்பொருள் பாராது (உம்)—அப்பேர்ப்பட்ட சிறப்புப் பொருளாயுள்ள சிவனை (என்னுடைய உடலின்கண் உள்ளத்தில் வைத்து) ஆராய்ந்து அறியாமலும்

பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொல் தெளியாமே (உம்)—சிவஞானப் பித்தர்கள் தாங்கள் சரியை கிரியை யோகம் ஞானம் என்கிற நான்கு வழிபாட்டு வழிகளில் எந்த வழியில் சிவனை வழிபட்டு அவ் வழிபாட்டு உறைப்பினால் தங்களுடைய உள்ளத்தி

லுணர்ந்து சிவனுடைய இன்பத்தை நுகருகின்றார்களோ அந்த வழியில் தாங்கள் நுகருகின்ற இன்பத்தைப்பற்றி எனக்குச் சொல்லி நான் கேட்ட அறிவுரைகளை(ச் சிந்தித்து)த் தெளியாமலும்

அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாம்—(அசட்டையாயிருந்த என்னை) எனது ஆருயிர்த் தந்தையாகிய சிவபெருமான் அடியார் கூட்டத்தோடு மானிட குரு வடிவில் திருப்பெருந்துறைக்கு வந்து எனக்கு ஞானதீக்கை செய்து என்னை அடிமையாக ஆண்டு பேரின்பம் அருளிய புதுமையைக் கண்டாம் [சிவபெருமான் என்மேல் வைத்த பேரிரக்கம்தான் என்னே!]

விளக்கவுரை:—

நறுமலர் எழுதரு நாற்றம்போல்—நறுமலர்—நாற்றம் ஏழாம் வேற்றுமைத் தொகை. நறுமலரின்கண் நாற்றம், எழுதரு—எழும் உண்டாகும். நறுமலர் எழுதரு நாற்றம் என்ற உவமையால் நாற்றமானது அம்மலர் அரும்பா யிருக்கும்பொழுது தனது நாற்றத்தை அகத்தே முற்றிலும் அடக்கி வைத்திருத்தலும், விரியாது குவிந்திருக்கும் மொட்டாயிருக்கும்பொழுது தன்னை மூக்கில் வைத்து மோந்து பார்க்கிறவர்களுக்குத் தனது நாற்றத்தைச் சுருங்கிய அளவில் காட்டுதலும், விரிந்திருக்கும்பொழுது தனது நாற்றத்தை விரிந்த அளவில் நன்கு விளங்கக் காட்டுதலும் செய்தல்போல எல்லா மாந்தருடைய உடலிலும் உடலின்கண்ணுள்ள உயிரிலும் எப்பொழுதும் பிரியாது நிறைந்திருக்கும் இறைவன் அவர்களுடைய அறியாமைக்காலத்தில் முற்றிலும் மறைந்தும், அவர்கள் அருள்நூல்களைக் கற்றுக் கேட்டு நுணுகி ஆராயுங்காலத்தில் தனது உண்மையையும் பொது இயலையும் அவர்கள் கருவி அறிவில் விளக்கியும் சரியை, கிரியை, யோக, வழிகளில் தவம்செய்து அதனால் அருள் அறிவு கிடைக்கப் பெறுகிறவர்களுக்குத் தனது சிறப்பு இயலை அவர்கள் அருள் அறிவில் விளங்கச் செய்தும் அருள் செய்கின்றான் என்பது கூறப்பட்டது. "பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்" என்றும் "கந்த மலரிற் கமழ்கின்ற நந்தியை" என்றும் திருமூலர் திருமந்திரம் 1459,1460-ம் பாட்டுகளிற் கூறியருளினமை காண்க. இங்கே மலர் உடலுக்கும் நாற்றம் இறைவனுக்கும் உவமப் பொருள்களாயின.

உற்ற ஆக்கையின் உறுபொருள் பாராது—"உடம்பினாலாய பயனாவதெல்லாம், திடம்பட வீசனைத்தேடு" என்று ஔவையாரும், "உடம்பினுள்ளே யுறுபொருள் கண்டேன்" (திருமந்திரம் பாட்டு 725) என்று திருமூலரும் கூறி யருளினமை காண்க. அடிகள்தாம் உடலை அது

வதுவாய் அழுந்தி அறிந்து உடலையே தாம் என்று அறிந்ததுமல்லாமல் அவ்வுடலைவிட்டு உடலின்கண்ணுள்ள உயிரினுள் விளங்குவதாகிய சிவத்தை நாடித் தேடிக் காணவில்லை என்பார் 'உற்ற ஆக்கையின் உறுபொருள் பாராது' என்றார்.

பற்றலாவது ஓர் நிலையிலாப் பரம்பொருள்—சிவபெருமான் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பினும் அவற்றினடங்காமல் அவற்றின் வேறாயும் விளங்குவார் என்பார் 'பற்றலாவதோர் நிலையிலாப் பரம் பொருள்' என்றார். சிவன் யாதொரு பொருளையும் பற்றாது நிற்கின்ற தன்மையை உடையவன் என்பதைப் பண்டைத் தமிழ் நூல்கள் 'கந்தழி' என்ற பெயராற் கூறுகின்றன. பற்றலாவது ஓர்நிலை—பற்றுதலால் உண்டாவதொருநிலை—உடலைப்பற்றி அதுவதுவாய் அதனுடன் அடங்கி நில்லாத மேலான பொருளாதலின் அதனைப் 'பரம்பொருள்' என்று கூறினார். 'உண்மையுமாய் இன்மையுமாய்' என்றும் 'உன்னை அன்றி ஒன்றில்லை' 'ஒன்றும் நீயல்லை' என்றும் அடிகள் பிற இடங்களிற் கூறிய கருத்தும் இதுவே. சிவபெருமான் நறுமலரெழுதரு நாற்றம்போல் உற்ற வாக்கையினுறு பொருளாயும் பற்றலாவதோர் நிலையில்லாப் பரம்பொருளாயு மிருக்கின்றான் என்று இலக்கண முடிபு செய்க. சிவபெருமான் தோன்றா எழுவாய். உறுபொருள் பரம்பொருள் இரண்டும் பயனிலைகள்.

அப்பொருள்—அப்பேர்ப்பட்ட சிறப்புடைய பொருள்.

பாராதே (உம்) பார்த்தல்—நுணுகிப் பார்த்தல், ஆராய்தல்; அறிவு நூல்களில் நான் கற்றறிந்ததை ஆராய்ந்து அறியாமலும். அறிவு நூல்களிலுள்ள பொருள்களை நுணுகி ஆராயாதவர்களுக்குச் சிவனுடைய பொது இயல் விளங்காது என்பது கருத்து. அடிகள் "ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானே" என்று சிவபுராண அகவலிற் கூறியருளினார். ஏ-அசை. தொக்கிநிற்கிற உம் விரித்துப் பொருள் உரைக்கப்பட்டது.

பெற்றவா பெற்றபயன்—பெற்றவாறு என்பது பெற்றவா என ஈற்றுயிர் மெய் கெட்டது. ஆறு—வழி. ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் வழிகள். பெற்ற பயன் என்பது ஞானச்சரியை முதலிய நான்கு வழிகளிலும் பிராணாயாமம், அஞ்செழுத்தோதல், சிவோகம்பாவனை முதலிய பயிற்சி உறைப்பினால் உள்ளத்திலே தோன்றுவதோர் அருளொளியாற் பெறப்படும் இன்ப உணர்ச்சி.

பித்தர்சொல் தெளியாமே (உம்)—பித்தர்—ஞானப் பித்தர்; அதாவது, உலகப் பற்றுக்களைவிட்டுச் சிவனை அடைதலிலேயே நாட்டமுடையவர்களாய் அவனிடத்திற் பற்றுவைத்திருக்கிற ஞானிகள். இந்த

ஞானிகள் தங்கள் சுவாநுபூதி நிலையில் உணர்ந்த அறிவுரைகளை எனக்குச் சொன்னபொழுது அவ்வுரைகளைக் கேட்ட தாம் அவைகளின் உண்மையைச் சிந்தித்துத் தெளியவில்லை என்று கூறுவார் 'பித்தர்சொல் தெளியாமே' என்றார். தெளியாமே என்பதிலுள்ள 'மே' எதிர்மறை யிடத்துவரும் எதிர்கால வினையெச்ச விகுதி. உம் விகாரத்தாற் றொக்கது. 'பாராதே' என்பதனால் கற்றல் அறிவினால் சிவனுடைய பொது இயலை அறியும் ஆராய்ச்சி அறிவும், 'தெளியாமே' என்பதனால் அறிந்தார்பாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல்களால் சிவனுடைய சிறப்பு இயலை அறியும் மெய்யறிவும் கூறப்பட்டன. "கற்றல் கேட்ட லுடையார் பெரியார் கழற்கையாற் றொழுதேத்த" என்று திருஞானசம்பந்த அடிகள் 'தோடுடைய செவியன்' என்ற பாட்டில் கூறியிருத்தல் காண்க.

ஆண்டு—ஆண்டு என்ற சொல்லுக்குமுன் 'அசட்டையாயிருந்த என்னை' என்ற சொற்கள் அவாய் நிலையால் தொக்கு நிற்கின்றன. அவற்றை வருவித்துப் பொருள் உரைக்கப்பட்டது.

அடியரிற் கூட்டிய—சிவபெருமான் தீக்கை செய்து அடிமையாக ஆண்டு கொள்ளப் பெற்றவர்கள் அவனால் அடியார் கூட்டத்திற் சேர்க்கப் படுதலால் ஆண்டு 'அடியரிற் கூட்டிய' என்றார்.

அதிசயம் கண்டாம்—அதிசயம் - புதுமை. முன் காணாதிருந்த ஒன்றைக் காணும் புதுமை. சிவபெருமானால் ஆண்டு அருளப் பெற்றலின் அடிகளுக்கு உண்டான பேரின்ப உணர்ச்சியானது முன் இல்லாதிருந்து இப்பொழுது புதுமையா யிருத்தலால் 'அதிசயம்' என்றார். அடிகளுக்குத் தமது உள்ளத்திலுண்டான பேரின்ப உணர்ச்சியானது தாம் சேர்க்கப்பட்ட அடியார் கூட்டத்துடன் சேர்ந்து உணரப்படுதலால் 'கண்டாம்' என்று பன்மையிற் கூறினார். ஏ-ஈற்றசை. உடம்புவழியில் ஆன்மா சிவனைக் காணலாம் என்பது

"உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"

என்று திருநாவுக்கரசு அடிகள் தனித்திரு நேரிசை 4-வது பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

ஆன்மாவானவன் அசத்தாகிய உலகத்தைச் சாராது சத்தாகிய சிவத்தைச் சார்ந்து பக்குவமடைந்த பொழுது ஞானதீக்கையால் மும்மலங்களும் நீங்கப்பெற்று ஆன்மபோதம் தோன்றாதபடி பேரொளிச் சிவசொரூபத்திலடங்கிச் சிவமே தானாய் நிற்றல் முத்தி என்பது இந்தப் பாட்டிற் கூறப்பட்டது.

மா. வே. நெல்லையப்பபிள்ளை.

சமயமும் தத்துவமும் :
Religion & Philosophy

மும்மையாலுலகாண்ட மூர்த்தி

(முன் ககஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

(வித்வான் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் M.A., B.L.)

கண்ணாடிக் காட்சி:—இப் புனைந்துரைக் கூத்தினுள் பொதிந்து விளங்குவது யாது? இதனை யறிவதற்குமுன் சேக்கிழார் பாடிய வரலாறு தான் யாது என அறியவேண்டாமா? இதனை உமாபதி சிவனார் ஒரு பாட்டிலே சுருக்கிப் பாடியுள்ளார்.

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தி யாராம்
வணிகர்திரு வாலவாய் மன்னர் சாத்தத்
தழங்குதிர முழங்கைதாத் தேய்த்த ஊறும்
தவிர்ந்தமணர் வஞ்சனையுந் தவிர மன்னன்
இழந்தவுயி ரினனாக ஞால நல்க
எழில் வேணி முடியாக விலங்குவேட
முழங்கு புகழணியாக விரைநீ றாக
மும்மையுல காண்ட ருளின் முன்னினாரே.

மூர்த்தியார் மதுரையில் வாழ்ந்த ஒரு செட்டியார். இறைவனுக்குச் சந்தனத் திருத்தொண்டு செய்து வந்தார். அவ்வூர் அரசனோ அமணன்; ஆகலின் இவருடைய திருத்தொண்டிற்கு முட்டுப்பாடு நேரச்செய்தான். அப்போது மூர்த்தியார் தமது முழங்கையையே தேய்க்கத் தொடங்கினார். கடவுளாலும் காணக்கூடவில்லை. தேய்த்த ஊறும் தீர்ந்தது: அரசனும் இறந்தான். இவரே அரசரானார். திருநீற்றினைச் சாந்தாகவும், திருமுடியை அரசனுடைய மணிமுடியாகவும், திருமணியைத் திருக்கோலமாகவும் கொண்டு மூன்றுலகையும் ஆண்டார். அருளொடு ஒன்றாகினார். இவ்வளவே இவ் வரலாறு. பெரிய பொருளைச் சிறிய கண்ணாடிக்குள் காண்பதுபோல 49 பாடல்களில் வரும் வரலாற்றை உமாபதி சிவனாரது ஒரு பாட்டில் நாம் காண்கின்றோம்.

மூன்று அடையாளங்கள்:—இவ் வரலாற்றின் நுட்பம் என்ன? அதனையே ஆளுடைய நம்பிகள் 'மும்மையால் உலகாண்ட மூர்த்தி' என்று விளக்குகின்றார். ஈதே மூர்த்திநாயனாருடைய உலகிலே அவர் கண்ட அம்பலக் காட்சி. மூன்றுவன யாவை? திருநீறு திருமுடி திருமணி என்பவையேயாம் எனச் சேக்கிழார் விரிவுரை செய்கின்றார்.

நுதலின்கண் விழித்தவர் வாய்மை நுணங்குநூலின்
பதமெங்கு நிறைந்து விளங்கப் பவங்கண்மாற
வுதவுந்திரு நீறுயர் கண்டிகை கொண்ட வேணி
முதன்மும்மையி னுலக காண்டனர் மூர்த்தி யார்தாம்.

எனப் பாடுதல் காண்க. இம் மூன்றும் மூன்று பேருண்மைகளைக் குறிக்கும் அடையாளங்களேயாம். தூய்மையைச் சுட்டுவதே திருநீறு. இறைவனின் அருட் கண்ணின் அன்புத் துளியாம் திருமணியே இன்ப அன்பினைச் சுட்டுவது. பற்றற்ற நீத்தார் பெருமையைச் சுட்டுவதே திருமுடி.

மாசிலாத மணிதிகழ் மேனிமேற்
பூசுநீறுபோ லுள்ளும் புனிதர்கள்

என்றும்,

ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர வன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ

என்றும் திருநீற்றின் உண்மையையும் திருமணியின் நுட்பத்தையும் சேக்கிழார் பெருமான் விளக்கி யருளுதல் காண்க.

கேடு மாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

என்ற பாடல் அடியார்களிடத்தும் நீத்தார் பெருமை கொழுந்து விட்டெரிகிற தென்பதை விளக்குகின்றது. நீத்தார் பெருமைக் கோர் அறிகுறியாகும் திருமுடியின் பெருமையே இங்குக் கூறப் பட்டதெனலாம். அகமும் புறமும் தூயவராய் எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராய் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் உலகை யாண்டுவந்தார் மூர்த்தி நாயனார் என்ற நற்செய்தியே

ஆளுடைய நம்பிகள் நம்மவர்களுக்குத் தெரிவிப்பது. அறவோர் அரசரான வரலாறே மூர்த்திநாயனர் வரலாறு. இதனை மூர்த்தி நாயனரின் வாயில் வைத்தே அழகுபடப் புனைந்துரைக்கின்ருர் சேக்கிழார்.

> "வையம் முறைசெய் குவனகில் வயங்கு நீறே
> செய்யு மபிடே கமுமாக செழுங்க லன்கள்
> ஐயன் னடையா ளமுமாக வணிந்து தாங்கு
> மொய்புன் சடைமா முடியேமுடி யாவ தென்ருர்"

எனவருதல் காண்க. திருநீறு முதலியவற்றின் உட்பொருளைக் கருதாது விடின் இப்புனைந்துரையின் நுட்பத்தை அறியாதவர்களாவோம்.

> "வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர்
> தாண்டவப் பெருமான் றனித்தொண்டர்கள்"

என்று சேக்கிழாரே பாடுவதால் இக்கோலந்தான் இன்றியமையாததெனக் கூறுவதற்கில்லை. ஒரு கோட்பாடு பற்றி மூர்த்தியார் இவ்வடையாளங்களை மேற்கொண்டார் ஆதலின் அவை எவற்றின் அடையாளமென ஆராய்ந்து அவ்வழகிலும் அவ்வுண்மையிலும் ஈடுபடுதல் வேண்டும்.

ப்ளேடோவின் கனு:—ப்ளேடோ என்ற யவன நாட்டறிஞர் "மெய்யுணர்வு கைவந்த அறவோனே அரசனய் உலகையாள வேண்டும்; அப்போதே நாடு சிறந்தநிலையில் விளங்கும்" எனக் கனக் காண்கிருர். அரசன் தன்னுடைய நாட்டினர்க்குக் கையும் கண்ணும் உடலும் உயிருமாய் விளங்குதல் வேண்டும். "இவன் வேறு இவனுடைய நாடுவேறு" என்ற எண்ணம் இவனுள்ளத்தோ பிறருள்ளத்தோ எழவே கூடாது. இத்தகைய உயரிய நிலையை எங்குக் காணுதல் கூடும்? எல்லோரையும் அரசராக்கினல் காணலாம் எனக் குடியரசினை நாட்ட முன் வருகின்றனர் இந்தக் காலத்தார். பொன்னுக்கும் கள்ளுக்கும் தம் பிறப்புரிமையை விற்பார் தம்முடைய நன்மையை எவ்வாறு அறியக்கூடும் என்று கேட்பார் சிலர். எல்லாம் அறிந்த பெரியோன் தன்னலமற்று அரசனனல் இம் முட்டுப்பாடு ஒன்றும் இல்லையாம். அறவோனே அரசனனபோது உலகம் உயர் நிலையை அடையக்கூடும் என்ருர் ப்ளேடோ என்ற பெரியோர். பொய்த்துறவு பூண்டொழுகுவோர் அற்றம்பார்த்து அரசானல், கூடா வொழுக்கத்தால்

பழியே பெருகும். உண்மைத் துறவு நிலையிலே உயர்ந்து நின்றவர்கள், உலக நன்மையைக் கருதி உலகை ஒருகுடைக் கீழ் ஆள முன் வருவார்களானால் உலகமே நன்மையடையும். மற்றைய அரசர்கள் தாம் என்ற முனைப்புக் கெட வாழ்தல் அருமையினும் அருமை. தம் மக்கள் தம்மனைவியர் தாம் என்ற எண்ணங்கள் வரும்போது மற்றைய அரசர்கள், தம்மையும் தம் நாட்டினரையும் வேறு பிரித்தே எண்ணுவர். இவ்வாறு எண்ணு திருக்கக் கூடிய அரசன் அவ்வாறு ஒற்றுமைக் காட்சியிற் பழகிய அகத் துறவியேயாகும். அதுபற்றியே ப்ளேடோ அனைத்துயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகி அவாவற்று மெய்யுணர்வு பெற்ற அந்தணர் என்னும் அறவோரே அரசராய் வருதல் வேண்டும் என வற்புறுத்துகின்றார்.

நெருப்பாறும் மயிர்ப்பாலமும்:—ஜநகர் என்ற அரசர்பெருமானை அறியாதார் இல்லை. அவர் வரலாறு ஒன்று இருக்கவும் மூர்த்திநாயனர் புராணத்தால் ஆவது என்ன? ஆவதோர் நுட்பம் உண்டு. ஜநகர் அரசர் குடியிலே பிறந்து அரசராய் வாழ்ந்து வருகையிலேயே ஐயுணர்வும் மெய்யுணர்வும் பெற்றவரே யன்றித் துறவியாய் மெய்யுணர்வுபெற்று அதன் பின்னர் ப்ளேடோ கண்ட கனவிற்கிணங்க அரசரானவர் அல்லர். அரசசெல்வத்திலேயே திளைத்திருந்தும் நெருப்பாறும் மயிர்ப்பாலமுமாக நன்னெறியில் நடந்து சென்று பற்றற்று நின்ற பெருந்தகையார் ஆவர் அவர். ஆதலின் அவர் வரலாறு ஒருபோக்கு என்க.

குருதிக்கடலில் அன்புக்கதிரவன்:—அசோகர் என்ற அரசர் பெருமானும் கலிங்கப்போரில் பல உயிர்கள் அழிந்தது கண்டு மனநைந்து உயிர்க்கொலையை முற்றும் வெறுத்து அன்புக் கொள்கையை உலகனைத்தும் பரப்ப முன்வந்தார். இவராளுகையின்கீழ் இந்நாடு என்றும் இல்லாத சீருஞ் சிறப்போடு பேரும்புகழும் பெற்றது. ப்ளேடோவின் கனு பெரிதும் உண்மையாகிவிட்டதெனலாம். ஆனல் ப்ளேடோவினுடைய கொள்கைகள் அனைத்தையும் அசோகரிடம் காணமுடியாது. அசோகர் மெய்யுணர்வு பெற்ற அறவோரோ என்பது ஐயத்திற்கிடமே. ஆதலின் அவர் வரலாறும் வேறொரு போக்கேயாம்.

(தொடரும்)

இலக்கணமும் இலக்கியமும்:
Language & Literature

* தமிழகம்

உலகே லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்.

1. மாட்சிமை தங்கிய அமைச்சாவர்களே! செந்தமிழ்ச் சீரியர்களே! பெரியோர்களே! மற்றுமுள்ள அன்பர்களே!

2. இப்பெரும் நன்னளில் தமிழகம் என்னும் அரிய பொருள் பற்றி இச்சிறியேனை விரிவுரை நிகழ்த்துமாறு கட்டளை யிட்டமைக்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

3. தமிழகத்தின் தொன்மையைப் பற்றி அறிஞர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டு வருகின்றனர். யான் இவ்வாராய்ச்சியில் இறங்குமுன்னர் பெரியோர்களுக்கோர் வேண்டுகோள். எடுத்துக்கொண்டுள்ள பொருள் பல்லூழி காலங்கட்கு முற்பட்ட செய்தியைக் குறித்தது. இதில் இஞ்ஞான்று காட்டப்படும் முடிபுகள்தாம் முடிந்த உண்மைகள் என்று நிலைநாட்டப் போந்தேனல்லேன். ஆராய்ச்சியாளரின் நுண்ணறிவிற்குத் தக்கவாறு, புதுச்சான்றுகள் தோன்றத் தோன்ற இவை மாறுதலடையக் கூடியவைகளே. இதுபோழ்து பல துறைகளில் கிடைக்கக் கூடிய ஆதாரங்களை ஆராய்ந்து பின்வருமாறு யூகிக்க இடமேற்படுகிறது.

---

* கோவைத் தமிழ்ச்சங்கம் 38-வது ஆண்டு நிறைவு விழாவில் சென்னை அரசாங்கக் கல்வி மந்திரி திவான்பஹதூர். S. குமாரசாமி ரெட்டியாரவர்கள் தலைமையில் கோவை முனிசிபல் ஊமைப் பிள்ளைகள் பள்ளிக்கூட ஆசிரியர் S. நடராஜன்.B.A. நிகழ்த்திய சொற்பெருக்கு.

நூற் சான்றுகள்

4. வானநூல் (Astronomy) நிலநூல் (Geology) மொழிநூல் (Literature) தொல்லுயிர்நூல் (Anthropology) ஆய நுண்ணூல் (சாஸ்திரங்)களிலிருந்து பல சான்றுகள் கிடைக்கின்றன. இவைகளைச் சீர்தூக்கி நாம் தமிழ்நாட்டின் தொன்மையைப் பற்றி ஒரு முடிவுக்கு வருதல் கூடும்.

ஞாலம் ஓர் கோள்

5. தொலைநோக்காடி (Telescope) கொண்டு நாம் விண்ணைத் துருவி நோக்குங்கால் எண்ணில் பல ஞாயிறுகளும் அவற்றைச் சுற்றும் உலகங்களும் (Planets) புலனுகின்றன. ஞாயிற்றையும் அதைச் சுற்றும் உலகங்களையும் ஓர் அண்டமெனலாம். இதை ஆங்கிலத்தில் (Solar system) என்பர். நாம் வசிக்கும் இம் மண்ணுலகமானது செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி, யுரானஸ், நெப்டியூன் முதலிய ஞாயிற்றைச் சுற்றும் மற்றக் கோள்கள்போன்ற (Planets) * ஒன்ருகும்.†

ஞாலத்தின் தோற்றம்

6. இஞ்ஞாலமானது, சுழலும் ஞாயிற்றினின்றும் சிதறி வீழ்ந்த ஓர் திவலையாம். எவ்வாறு எரிகின்ற விளக்கினின்றும் உதிர்கின்ற பொறி சிறிது போழ்து எரிந்துகொண்டிருந்து, பின்னர்க் குளிர்ந்துவிடுகிறதோ அதேபோன்று ஞாயிற்றினின்றும் சிதறிவந்த பொறியாகிய இம்மண்ணுலகமும் ஆதியில் எரிந்துகொண்டிருந்து இதுபோழ்து குளிர்ந்து வருகிறது. இஞ்

---

*Planets:—Mercury, Mars, Venus, Earth, Jupiter, Saturn, Uranus, Neptune.

†"எல்லை மருவா நெறி அளிக்கும், வாதவூரெங்கோன், திருவாசகம் என்னும் தேனில்",

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன ;
இன்னுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் ;

என அருளினமை இத்துடன் கருதற்பாலது.

ஞான்றும், கோள வடிவமான இவ்வுலகின் மேற்பரப்பிலிருந்து சுமார் 30 கல் (Mile) உட்சென்ருல் அப்பாகம் எரிந்து கொண்டிருப்பதைக் காணலாமெனவும் சுமார் 100 கல் ஆழத்தி அகன்ற நெருப்பு மாக்கடல்கள் இருக்கின்றன எனவும் நில நூலார் கூறுகின்றனர்.

படைப்பு

7. படைப்பைப்பற்றி பல்வேறு சமயத்தினர் பல்வேறு வகையாகக் கூறுவர். நிலநூல், தொல்லுயிர்நூல்வல்லார் பஞ்ச பூதத்தின் செயல் என்பர். நந்தமிழர் *"வான், முதலாவதாக வும், பின் காற்றும், அதற்குப் பின் தீயும், அதற்குப்பின் நீரும், இறுதியாக நிலனும் உண்டாயின" என்பர். பரிபாடல் 2-ம் பாட்டினுள்,

"விசும்பிலூழி யூழூழ் செல்லக்
கருவளர் வானத் திசையிற் ரோன்றி
உருவறி வாரா வொன்ற னூழியும்
மூர் துவளி கிளர்ந்த வூழூ ழூழியும்
செந்தீச் சுடரிய வூழியும் பனியொடு
தண்பெய றலைஇய வூழியு மவையிற்
றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
மீண்டும் பீடுயர் பீண்டிய வற்றிற்கு
முள்ளீ டாகிய இருநிலத் தூழியும்"

என்றமை காண்க. "நாம் வசிக்கும் இம்மண்ணுலகம், ஆதியில் அக்னி ஜ்வாலா ரூபமாக சிருஷ்டிக்கப்பட்டும்; பிறகு ஐம்பது லக்ஷ வருஷங்களான பிறகு கேவல ஜல ரூபமாக மாற்றப்பட்டும் பிறகு முப்பத்தைந்து லக்ஷ வருஷங்களான பிறகு இப்போ திருக்கும் படியான பிரகிருதி (மண்) ரூபமாக மாற்றப்பட்டும் வந்ததென்று பூததத்துவ சாஸ்திரம் முறையிடுகிறது"† இவ்வாறு நெருப்பாய், நீராய், நிலமாய், மாறிக் குளிர்ந்துவந்த உலகின் மேற்பரப்பு மக்களினந் தோன்றுதற்குமுன் சுட்டு ஆறின கத்தரிக்காயின் மேற்றோல்போல், மேடும் பள்ளமுமாய் அமைந்த தென்றும், அவ்வாறு அமைந்ததில் முக்கால்பாகம் நீர்ப்பரப்பு, கால் பாகம் நிலப்பரப்பு என்பர் நிலநூலார்.

---

* திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களது தமிழ் இலக்கிய வரலாறு
† Hindu Holy Bible.

நிலத்தோற்றம்

8. இவ்வுலகானது, ஆதியில் அழற் பிழம்பாக இருந்தகாலை, ஓர்வகை அனல் வாழ் உயிர்கள் படைக்கப்பட்டும்; அவைகள் மடிந்தபிறகு, அவற்றின் உயிர்க்காற்று, நச்சுக்காற்றுகளால், நீர்வடிவாக மாற்றப்பட்டும்; இவ்வாறு நீர்வடிவாக மாற்றப் பட்டதில் பல கோடிக்கணக்கான நீர்வாழ் உயிர்கள் படைக்கப் பட்டும், பின்னர், நீர்வாழ் உயிர்களின் தோல், நரம்பு, நிணம் குடல், எலும்புக்கூடு முதலியவைகள், படிப்படியாகப் படிந்து, இறுகி, நிலப்பரப்பு உண்டாயிற்றென்றும்; நிலநூலார் கருது கின்றனர். இதற்குச் சான்று இஞ் ஞாலம் நீர்வடிவான காலத்து உண்டான நீர்வாழ் உயிர்களின் உடற் கூடுகளாய கிளிஞ்சில்கள், பலகறைகள், சங்குகள், நத்தை ஓடுகள், பவளத்தண்டுகள், மீன் சப்பட்டைகள் முதலானவைகள் நிலத்தின் அடியில் இருப்பதை நிலநூல் அளவைக்காரர்கள் (Geological Surveyors) ஆங் காங்கு நிலத்தை அகழ்ந்து நோக்குங்கால் காண்பதேயாம்.

மக்கள் தோற்றம்

9. இவ்வாறு, மாறி, குளிர்ந்து, இறுகி வந்த ஞாலத்தின் மேல் பரப்பில் நடுக்கோட்டுப் பகுதியே (Equatorial regions) முதலில் குளிர்ந்து நிலப்பரப்பாகக் கூடியது என்பது நிலநூலார் துணிபு. இதனல் மற்றப் பகுதிகளில் மக்களினம் பின்னர்த் தோன்றக் கூடா தென்பதன்று. ஞாயிற்றின் ஒளியும், வெப்பமும் சாலவும் பெற்று, உயிர்கள் தோன்றிப் பல்குவதற்கு ஏற்ற நடுக்கோட்டுப் பகுதியில், மக்கள் முதலில் தோன்றி இருந்தால், மற்றப் பகுதிக ளில் அவ்வசதிகள் வாய்கையில் மக்கள் பின்னர்த் தோன்றி யிருக் கலா மென்பது தவறுகாது. ஆதலால், மத்திய ஆசியாவிலோ, அல் லது கடல்கொண்ட குமரிக் கண்டத்திலோதான் மக்கள் தோன் றிப் பின் மற்றைய பாகங்களுக்குச் சென்று இருக்க வேண்டும் என்பார் கூற்று பொருத்தமுடையதன்ரும். உடற்கூற்றுவல்லார் (Ethnologists) கூறும் மூவகை மக்கள் இனமாகிய காகேசியர், மங்கோலியர், நீக்ரோவர் என்பார் மூவரும் மூவேறு இடங்களில் தோன்றியிருத்தல் வேண்டும்.

(தொடரும்)

வெண்ணெய் அண்ணல்

[பண்டிதர். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள்]

பேறலருங் குணங்கள் தம்முட் செய்ந்நன்றியறிதலும் ஒன்றென ஆன்ரோர் கூறியுள்ளனர். செய்ந்நன்றி யறிதலிற் றலை சிறந்தவர் கன்னனும் கும்பகர்ணனுமே யாவரென்பது ஆன்ரோர் கருத்தாகும். ஆனால், இராமகாதையைத் தமிழிற் பாடியருளிய உம்பரும் போற்றும் கம்பர் பெருமானும் மேற்கூறப் பெற்ற கன்னன் கும்பகர்ணன் இருவரோடு வைத்துக் கூறத் தக்கவ ராவர்.

சடையப்ப வள்ளல் என்பார் வெண்ணெய்நல்லூரில் வாழ்ந்துவந்த தாளாண்மையிற் சிறந்த வேளாண் மரபினர். அப்பெருந்தகை, எந்நாட்டு வறிஞராயினும் தம்மை நாடிவரும் அவர்கட்கு ஈதலில் தவறார். அப்பெரியாரே நம் புலவர் பெருமானய கம்பரைச் சிறுபருவமுதற்கொண்டே பேரன்புடன் பாதுகாத்தவர்; கம்பரைச் சோழ வேந்தனிடம் அறிமுகப்படுத்தி, அவரது அளப்பரும் புலமையைத் தமிழ் நாட்டில் நிலவச் செய்தவரும் அவரேயாவர். வள்ளலே கம்பர் இராமாயணம் பாடி முடித்தற்கும் பெருங் காரணரா யிருந்தனர் எனின், அவர் கம்பர்பால் வைத்த அன்பின் திறத்தினை யாதென் றறைவது!

அண்ணல் தமக்குச் செய்த நன்றியை மறவாதுளங்கொண்ட கம்பர், ஒருவராலும் பெறுதற்கரிய பேற்றைத் தாம் செய்யும் பிரதி நன்றியாக அண்ணலுக் களித்துளார்; உலகம் உள்ளளவும் கம்பர் பெயரும் அவர் பாடியருளிய இராமகாதையும் நிலைநிற்பதே போல வள்ளல் அறச்செயலும் அருங்குணமும் இராமகாதையில் ஒளிருமாறு செய்துள்ளார். அண்ணல் செய்த உதவியைவிடப் பன்னூறுயிரம் மடங்கு பெரிதெனக் கருதுமாறு கம்பர் தம் பிரதி நன்றியை அண்ணலுக்கு எவ்வாறு அளித்துளர் என்பதை ஈண்டுக் காண்க.

கம்பராமாயணம் வேள்விப்படலத்தில், கோசிகன் இராமனுக்குப் படைக்கலம் அளித்தமை இன்னபடி யிருந்ததெனக் கூறுகின்ற கம்பர், 'ஊழி பெயரினும் தாம் சொன்ன சொற்களைச் சோரவிடாத பெருமை வேளாளர்க்குரியது; எம் அண்ணல் சடையப்பருக்கும் அஃதே' என உவமை முகத்தால் விளக்குகின்ருர்.

‘விண்ணவர் போய பின்றை விரிந்தபூ
மழையி னாலே
தண்ணெனுங் கான நீங்கித் தாங்கருந்
தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தெனச்
சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே யன்ன படைக்கல
மருளி னானே’

—வேள்விப் படலம்

‘மண்ணுலகத்தாரது வறுமை என்னும் நோய்க்கு மருந்து போன்ற வெண்ணெய் அண்ணலது சொல்லுக்கு நிகரான அத்திரங்களைக் கோசிகன் சீராமனுக் களித்தான்,’ என்று கூறிக் கம்பர் மகிழ்கின்றார். சடையப்பர் வழங்கும் சொற்கள் வாய்மையுடையன; அவை சிறிதுங் கெடாமல் கருதிய பயனைத் தருவன; அவை போன்றே கோசிகன் அளித்த படைக்கலங்கள் எய்குறி தவறாது வெற்றியைத் தருவன; இத்தகைய வள்ளல் சொற்களுக்கு நிகரான அத்திரங்களை முனிவன் கோசலக்குரிசிலுக்கு நல்கினான்—என்னும் கூற்றில் கம்பர், ‘சடையப்பரது சொல் வாய்மை தவறாதது’ என்பதை வலியுறுத்துதல் காண்க.

அடுத்தபடியாக, ‘அண்ணல் வறுமைப் பிணியைப் போக்குந் திறத்தால் உண்டான புகழ் உலகெங்கணும் பரவியதாம். அங்ஙனமே வெண்ணிலா உலகெலாம் பரவியது’ எனக் கம்பர், வெண்ணிலா, தன் விரிகதிர்களை விரித்த மாண்பினுக்கு வள்ளல் புகழை உவமையாகக் கூறுதல் எத்துணைப் பொருத்தமுடைத்து! ஏற்ற விடங்களில் வள்ளல் பெருமையை யமைத்துப் பாடும் போற்றல் பெற்றவர் கம்பரல்லரோ? தம்மைக் காத்த வேந்தரைப் புகழேந்தியாரும் வில்லிபுத்தூராரும் தாம் பாடிய நூல்களிற் பாடியுள்ளாரேனும், உயர்வுநவிற்சியணி தோன்ற வைத்தே பாடியுள்ளனர். கம்பரோ அங்ஙனமின்றி, வள்ளலது ஏற்றத்தை யுள்ளவாறே உரிய விடங்களிற் பாடி யுள்ளார். வள்ளலைச் சிறப்பிக்க இயலாத வொன்றைப் புதிதாய்ப் புகுத்தக் கம்பர் விழைந்தாரில்லை; விழைய இடமுமில்லை, பூணுக்குப் பூண் ஏற்றுக்கு?

‘வண்ண மாலை கைபரப்பி
உலகை வளைந்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்
துதயத் தெழுந்த நிலாக்கற்றை

விண்ணு மண்ணுந் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளவால் '

—உண்டாட்டுப்படலம்

' விண்ணையும் மண்ணையும் எல்லாத் திசைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்ட விரிந்த நன்னீரையுடைய பண்ணைகள் வாய்ந்த வெண்ணெய்நல்லூரில் வாழும் சடையன்றன் புகழ்போலத் தண்மதியின் கிரணங்கள் எங்கும் பரவின ' எனக் கம்பர் கூறும் உவமையும் பொருளும் எண்ணி யெண்ணிக் களிக்கத் தக்கவை யல்லவோ ? இதனால், வள்ளலது புகழின் விரிவு அங்கைக் கனியெனத் தெள்ளிதில் விளங்குகின்றமை காண்க. ' நிலாத் தோன்றுவதற்கு முன்னர் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது,—அதுபோல வள்ளலுக்கு முன்னர் வறுமைநோய் உலகெங்கணும் பரவி யிருந்தது ; நிலாத் தோன்றிய பின்னர் இருள் இருந்தவிடம் தெரியாவாறு மறைந்தொழிந்தது—அதுபோல வள்ளல் தோன்றிய பின் வறுமைப் பிணி யொழிந்தது. நிலா வெளிச்சம் உலகெலாம் பரவி மக்களை இன்புறுத்துவதுபோல வள்ளலது வள்ளற்றன்மை உலகெங்கும் பரவி மக்களை இன்புறச் செய்கின்றது ' என இத்துணை ஆழ்ந்த கருத்துக்களைக் கம்பர் ஒரு சிறு கவியில் செறிய வைத்துள்ள திறத்தினைப் புகழ்வேமோ? அன்றி, அவர் அண்ணலை அழகுறப் புகழ்தலைப் புகழ்வேமோ? யாதே யாம் செய வல்லோம்!

(தொடரும்)

தமிழ் மொழியின் ஒலிகளும் எழுத்தும்

[ஈப்போ. திரு. தியாகராயன் அவர்கள்]

(முன் கஉ.0-ம் பக்கத் தொடர்ச்சி)

Symbol	Sound represented
17 *P*	th in think, both
18 *F*	th in this, breathe
19 *S*	Sh in Sheet, Machine, Nation
20 *Z*	The sound in Vision, Azure

21 J Y as in you, the same sound in Beauty, few

22 *D* Ng in long

Organs of Speech Lips	Front of tongue	Back of tongue
Stop Consonants P.B.	T.D. *P* (th) both *F* (th) Soft-this	K.G.
Open Consonants W. F.V.	I R S Z *S* sheet, *Z* vision J beauty	
Nasal Consonants M.	N	*D* long

There are several points to be noted about the Consonants.

The aspirate H is not included in this table because H is merely breath and not a voice.

C is absent because its sound as in City is represente d by S.

CH as in Church is a combination of T and S, ie., tsh.

C as that in Cut is found in K.

J as that in gem.

Dg as in judge consists of dz i.e. D× (the sound in vision.)

Q represents QU or KW as quite.

X represents K S as in fix, excite, or G *Z* as in exist,

Y is represented by I as in fly I or simply.

(Thus if C, J, Q, X, & Y are added to the fi rst list the consonantal sounds in English will be 27).

So C, J, Q, X & Y are redundant Consonants.

Yet to represent these 22 sounds, there are 11. consonantal diagraphs in addition.

ஈரெழுத் தோரொலி (மெய்கள்)
Consonantal Diagraphs

ch, gh, ng, ph, pp, rh, rr, sc, sch, (trigraph), sh, as, th என்பனவாம். இக் கூட்டெழுத்துக்களின் ஒலிகள் முற்கூறிய 22 எழுத்துக்களிலு முளவாம். அன்றியும் இக்கூட்டெழுத்துக்கள் வெவ்வேறிடங்களில் வெவ்வேறு ஒலியுடனும் சில இடங்களில் ஒலியின்றியும் (silent) நிலையும். உதாரணமாக ch என்னுங் கூட்டெழுத்து ச் எனவும் (church), ஷ (chagrin) எனவும், க் எனவும் (epoch), yacht என்னும் சொல்லில் ஒலியற்றும் நிகழ்வதைக்காண்க. இவ்வாறே ஏனைய கூட்டெழுத்துக்களுக்கும் உதாரணங் கொடுக்கின் பெருகுமென விடுத்தாம்.

மேற்கூறியவாறு ஆங்கில மொழியின் ஒலிகளும் அவற்றைக் குறிக்கு மெழுத்துக்களும் ஒத்து இயங்காத் தன்மையுடையனவாகையால் அம்மொழியில் 26 எழுத்துக்களே யுள்ளனவாயினும் அவற்றின் ஒலிகளை விளக்கிக்காட்ட 158 தலை விதிகளும் ஏறக்குறைய ஆயிரத்து நானூறு உதாரணங்களும் உள்ளன.

இப்பெருங் குறைவை ஆங்கிலேயர்களும் மற்றவர்களும் மிகக் கண்டித்து எழுதியிருக்கிறார்கள். சில பின்வருமாறு:—

Austin K. Grey: (A Guide to the English language)

"1. ஒருயிர் பல் உயிர்களைப் போன்றொலிப்பது.

2. ஒருயி ரொலியைக் குறிக்க ஈரெழுத்துகள்.

3. ஓர் மெய்யொலியைக் குறிக்க இரு மெய்யெழுத்துக்கள் வருவது.

மேற்கூறிய குறைகளுக்குக் காரணம் யாதோவெனின் நம் மெழுத்துக்களின் போதாத்தன்மையேயாம். நம் மடமையே காரணமாக இன்னும் பல குறைகளுமுள்ளன."

இக்குறைவு ஆங்கிலமக்களின் மடமைக்கும் மனப்போக்கிற்கும் சோம்பலுக்கும் இடங்கொடுத்து ஒரு சொல்லையே பலவிதமாக யெழுதுந்தன்மை ஓர் காலத்திலிருந்து வந்தது உதாரணமாக scissors என்னுஞ் சொல்லை ஏறக்குறைய 50 வகையில் எழுத்துக் கூட்டி எழுதினார்களாம். Shakespeare என்னும் ஆங்கிலக் கவிஞரும் தன் பெயரை ஆறு வகைக்கு மேற்பட எழுதினாராம். இக் காலத்திலும் இக்குற்றம் நிகழ்ந்துவருகின்றது. உதாரணம்:—
Jennens என்னும் பெயர் இக்காலத்தில் Jenens, Jennings,

Jeninge, Jenny, Jenney, Genanes, Ganney எனப் பல்வகையில் எழுத்துக்கூட்டி வழங்கப்படுகிறது. முதலில் குறித்த Jennens என்னும் பெயருடையவர் 1798-ம் ஆண்டில் உயில் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார். அவர் பொருளைப் பங்கிட்டுக் கொள்வதற்குப் பிற்கூறிய எழுவகைப் பெயருடையவர்களும் தாம் தாம் உரியவர் என நீதிமன்றத்தில் வாதாடினர்களாம்.

ஆங்கில இலக்கண நூலாசிரியரான J. C. Nesfield என்பவர் "நம் மொழியில் உயிரொலிகள் அதிகமாகவும் அவற்றைக் குறிக்கும் உயிரெழுத்துக்கள் குறைவாகவு மிருப்பதால் ஓருயிரொலியை ஈரெழுத்துக்களால் குறிக்கின்றோம். அன்றியும் ஈரெழுத்தின் கூட்டொலியை ஓரெழுத்தாலுங் குறிக்கின்றோம். அவ்வாறே ஒரு மெய்யொலியை இரு மெய்யெழுத்துக்களாலும் இரு மெய்களின் கூட்டொலியை ஓரெழுத்தாலும் குறிக்கின்றோம். இவ்வகைக் குற்றமுடையது நம்மொழி (Such is the perversity of our spelling)" எனக் கூறியுள்ளார்.

Websters அகராதி இயற்றியோர்,

"முற்காலத்தில் ஆங்கிலமொழி, சொல்வதுபோல் எழுதுவதாயும் எழுதுவதுபோல் சொல்லுவதாய தன்மையும் வாய்ந்திருந்ததேயாயினும் தற்காலத்தில் எழுத்தும் ஒலியும் ஒத்தியங்காத் தன்மையுடன் நம்மொழி வழங்குகிறது. (In modern English, however, the spelling of many words is so far from phonetic that it scarcely even suggests its pronunciation)" எனக் கூறியுள்ளார்.

Rabindranath Tagore. (Modern Review June 1931 p. 621.)

"Most of the Englishmen and Americans are blissfully unconscious of the mercilessness of their language. They will admit, however, that neither its spelling nor its syntax is perfectly rational"

This state of affairs drove some one to write the following:—

If an S and an I and an O and a U with an X at the end spell SU—And an E and a Y and an E spell I, Pray what is a fellow to do?—And if an S and an I and a G—

And HED spell *Sighed*—There is nothing much for a speller to do--But go and

commit $\frac{\text{Sioux}}{\text{(Su)}}$ $\frac{\text{—eye—}}{\text{(i)}}$ $\frac{\text{Sighed''}}{\text{(cide)}}$.

மேற்கூறியவற்றிலிருந்து ஆங்கிலமொழி ஓரொலி குறிக்க ஒரெழுத்தென்னும் விதியைத் தழுவாத மிகக் குறைவுபட்ட மொழியாம். தன் மொழியிலுள்ள சொற்களையே ஒலிக்கேற்ப எழுத்துக்களால் குறிக்கும் தன்மையற்ற இம்மொழியாளர் பிற மொழிச் சொற்களின் ஒலிகளைத் தம் மெழுத்துக்களால் குறித்து எழுதின் எவ்வாறாகுமென்பதை இதைப் படிப்போர் ஊகித் தறியட்டும்.

என்மட்டில் ஆங்கிலேயர் நம்மொழியாகிய செம்மொழியை இவ்வாறு ஈவிரக்கமின்றிக் கொலைபுரிகிறார்க ளென்றே சொல்லு வேன். (தொடரும்)

புத்த பகவான் பொருண் மொழிகள்

[பண்டிதர் திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(முன் கக உ.-ம் பக்கத் தொடர்ச்சி)

5. கணவனின் கடமைகள்.

பெருந்தகாய் !

1. மனைவியை யுடைமையாய் மதித்திட வொண்ணு.
2. மனைவியை யன்பால் வணக்கிடல் வேண்டும்.
3. பிறபெண் நாடும் பெற்றியுங் கூடா.
4. கொண்டவள் பேரில் வீண்குறை கூறேல்.
5. உண்டியும் நகையும் உடையும் உதவு.

6. மனைவியின் கடமைகள்.

பொற்றொடீ !

1. இற்பணி யனைத்தும் நற்பணி யெனக்கொள்.
2. விருந்துஞ் சுற்றமும் மருந்தென லாகு.
3. கணவனைக் கருத்திற் கண்டுகொண் டொழுகு.
4. சிக்கன மாகத் தேட்டைச் செலவழி.
5. திறமையுங் கவலையுஞ் செயல்களிற் காட்டு.

ஆராய்ச்சிப் பகுதி-Research

சோழர்கள் கல்வெட்டுகளிற் கண்ட சில குறிப்புக்கள்

[இராவ்சாஹிப் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

(முன் கஉசு-ம் பக்கத் தொடர்ச்சி)

II. பத்திர வாசகம்

மனிதர்கள் ஒருவருக்கொருவர் பேசிமுடித்துக் கொள்ளும் ஒப்பந்தங்களை நிரந்தரமாகச் செய்ய வேண்டிக் கடிதத்தில் எழுத்து மூலமாக ஆக்குவது உலக வழக்கம். அவ்விதம் அதற்கு ஏற்பட்ட கடிதத்தில் எழுத்து மூலமாகப் பதிப்பித்து விட்டால், அதனைச் சாசனம் அல்லது பத்திரம் என்கிறோம். இவ் விதம் எழுத்துமூலமாகப் பதிக்கும்போது ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்திற்கு தகுந்தபடி பத்திரவாசகம் ஏற்படுவதுண்டு. கிரயம், அடைவு, குத்தகை, பரிவர்த்தனை முதலியவை களுக்கு வெவ்வேறு வாசகங்களை நாம் கொண்டிருக்கிறோம். அவ்வித வாசகங்கள் நாட்டுப் பழக்க வழக்கங்களை ஒத்து இருக்கின்றன. ஆங்கிலம், உருது முதலிய மொழிகளில் வெகு காலமாய்ப் பிரயோகிக்கப்பட்டும், சட்டங்களில் திட்டப்படுத்தப் பட்டும் உள்ள மொழித் தொகுதிகளையே உபயோகிக்கவேண்டும். அவ்விதம் திரண்ட மொழிகள் தமிழில் ஏற்படாமல் போனபோதி லும், சில மொழித் தொடர்களாவது திட்டமாகப் பழக்கத்தில் ஏற்பட்டுவிட்டன. உதாரணமாக, சுத்தகாலக் கிரயம் செய்யும் போது, இக்காலத்தில் பத்திரங்களில் "புத்திர பௌத்திர பாரம் பரியமாகத் தானாதி விக்கிரய வினியோகங்களுக்குப் பாத்தியப்பட்டு நிதி நிட்சேபன பாஷாணங்களுடன்," என்று எழுதுவது வழக்க மாய் விட்டது.

மேலும், கிரயமோ அல்லது தானமோ செய்யும் சொத்துக் களைக் குறிக்கும் சொத்து விவரத்தில் சில பதத்தொகுதிகளை அவசியமாகச் சேர்த்துக் கொள்ளுகிறோம். அச் சொத்து ஒரு வீடு ஆயின் அதற்கு நாற்புறத்து எல்லைகளும் கூறி " இந் நான்கு

எல்லைக்குட்பட்ட இவ்வளவு அங்கணமுள்ள வில்லை வீடு அல்லது தார்சு கட்டிடமும் அதைச்சேர்ந்த கதவு, நிலவு, கட்டுக்கோப்பு, அட்டாவிப் பலகை, முன்வாசல், பின்வாசல், பிறவடை, சேந்து கிணறு சகிதம்'' என்று குறிப்பது வழக்கம். அச் சொத்து நிலமாயிருக்குமானால், கிராமத்தையும் மஜாராவையும் சொல்லி சில சமயங்களில் எல்லையையும் குறித்து நன்செய் அல்லது புன் செய் என்பதையும் வகுத்து “ மாவடை, மரவடை, துரஸ்துக் கிணர் அல்லது சிகிஸ்துக்கிணர், வாய்க்கால் பாத்தியம் சகிதம்'' என்று எழுதுவது வழக்கம். இவ்வித மொழித் தொடர்களை வெகுநாள்முதல் நமது நாட்டில் எழுதுவது வழக்கமாய்விட்டது.

இனி, இவ்வித மொழித்தொடர்கள் பண்டைக்காலத்துச் சோழர்கள் ஆட்சியிலும் வழக்கத்தில் இருந்துவந்தன. உதாரணமாக, கரூர்ச் சாசனங்களில் “உடும்போடி, ஆமைதவழ், புற்று எழுந்த இடம், கற்றுப்புல், பொகரமுற்றாட்டும் இருப்பதாக'' என்றும், “மேனோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும்'' என்றும் கண்டிருக்கின்றன. இவ்வார்த்தைகள் நான்கு எல்லையை எடுத்து எழுதி அவற்றின் பிறகு எழுதப்பட்டுள்ளன. இவ்வார்த்தைகளின் பொருள்களைச் சிறிது ஆராய்வோம்.

1. உடும்போடி:—இதனைச் சாசன பரிசோதகர் where the Iguana runs என்று பொருள் படுத்தி யிருக்கின்றார். உடும்பு பொதுவாக குடியிருக்கும் வீடுகளிலும் வேளாண்மை செய்யும் நிலங்களிலும் ஓடமாட்டாது. ஆகவே, வேளாண்மை யில்லாத நிலமாகிய புறம்போக்கு நிலமாக அஃது இருத்தல்வேண்டும்.

2. ஆமைதவழ்:—இதற்கு where the tortoise crawls என்று பொருள் கூறப்படுகிறது. வீடுகளில் ஆமை நுழைந்தால் அவ் வீடு பாழாகப்போகும் என்பது தமிழரின் கொள்கை. இதற்கு ஒரு பழமொழியும் உண்டு. “ஆம்பல் பூத்த அடுப்பும் ஆமை தவழ்ந்த வீடும் பாழ்'' என்பார்கள். ஆகவே ஆமை தவழும் நிலம் விளைவு இல்லாத நிலம் எனக் கொள்ளல்வேண்டும். ஆமை நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி. ஆதலால் அது தவழும் நிலம் நீர்வசதி அதிகம் உள்ள நிலமாக இருத்தல்வேண்டும். நீர்வசதி அதிகமிருந்து நிலமும் பயிருக்கு உதவாதிருக்கும் ஆகில் அந்நிலம் உவர் நிலமாகவோ சதுப்பு நிலமாகவோ இருத்தல் வேண்டும்.

அவ்வித நிலமும் பெரும்பான்மையாக புறம்போக்கு நிலமா இருக்கும்.

3. புற்று எழுந்த இடம்:—இதற்கு where an ant hill rises என்று பொருள் படுத்தப்பட்டிருக்கிறது. கறையான் புற்றுகள் எழுவது பொதுவாக விளைவில்லாத இடங்களிலே யாகும். ஆகவே இவ்விடங்களும் புறம்போக்கு இடங்களாக இருக்கும். கறையான் புற்றுகள் மிகப் பெரியவைகளாகவும் அழியாதவையாகவும் இருப்பன. ஓர் இடத்தில் ஓர் புற்று எழுந்த பிறகு அதனை எளிதில் அழிக்கமுடியாது. எவ்வளவு தோண்டிப் பார்த்தாலும் பின்னும் அதே இடத்தில் அது முளைத்துவருவது நாம் அறிந்ததே. ஆகவே, புற்று இருந்த இடங்களில் வேளாண்மை செய்வது முடியாத காரியமாகும். மேலும் புற்றுகள் வெகுகாலம் அழியா மலும் நிலத்தின்மேல் உயர்ந்தும் வளருவதினுல் புற்றுகளை அடையாளப் பொருள்களாக நம் முன்னோர்கள் கொள்வதுண்டு. நிலம் அல்லது கிராமம் இவைகளின் எல்லைகளைக் குறிக்கும்போது பெரிய மரங்களையும் புற்றுகளையும் எல்லைகளாகக் கொள்வார்கள். மரங்களேனும் ஒரு காலத்தில் அழியும். ஆனல் புற்றுகள் வெகு காலம் அழியாமல் இருப்பதால் நிலங்களின் எல்லைக்கற்களுக்குப் பதிலாகப் புற்றுகளை முன்காலத்தில் எடுத்து ஆண்டுவந்தார்கள்.

மேலும் புற்றுகள் கறையான்களால் எழுப்பப்பட்டன எனி னும், அவைகளில் பாம்புகள் குடிபுகுவது வழக்கம். பாம்புகளில் நல்ல பாம்புகளாகிய நாகங்கள் தெய்வத்தன்மை யுடையனவாகப் போற்றப் பட்டு வருவதினுல் புற்றுகளுக்குப் புனிதம் ஏற்பட்டு விடுகிறது. நாக பஞ்சமி என்ற விரத நாள்களில் புற்றுகளுக்குப் பொங்கலிட்டு வணங்குவதுண்டு. மார்கழி மாதத்தில் சில வகுப்பார்கள் புற்றுகளுக்குக் கோழி பலியிட்டு, பொங்கலிட்டு, பலியிட்ட கோழித் தலைகளை புற்றுகளின் வாயில்களில் போட்டு வருவதுண்டு. இவ்விதமாகப் புற்றுகளுக்கு ஆராதனை ஏற்பட்டு வருகிறதனுல் புற்று எழுந்த இடத்தை குறிக்கத்தக்க ஓர் இடமாக முன்னாளில் கொண்டார்கள்.

புற்றுகளுக்கு உள்ள பெருமை தமிழ் நாட்டில் மாத்திரமே யன்றி கேரளநாட்டிலும் அதிகம். பல புற்றுகள் உள்ள சிறு சோலைகளைக் கேரளத்தார் காவு என்று சொல்லுவார்கள்.

அக்காவுகளை மிகுந்த பயபக்தியோடு போற்றி வருவார்கள். சில தலங்களில் புற்றுகளையே தெய்வங்களாகவும் இலிங்கரூபங்களாகவும் வழிபடுவதுண்டு. புற்றுக்கு வடமொழியில் 'வான்மீகம்' என்று பெயர். ஆகவே வான்மீகநாதர் ஆலயங்கள் உள்ள திருவாரூர், திருவொற்றியூர் முதலிய தலங்களில் புற்றுகளே ஆதியில் ஏற்பட்டு இருந்தன. துளுவ நாட்டிலுள்ள சுப்பிரமணியம் என்ற பெயர் பெற்ற தலத்தில் புற்றுகளே ஆராதனைக்கு ஏற்பட்ட பொருள்களாகி இருக்கின்றன. இவ்வளவு சிறப்போடு புற்றுகளை நம் முன்னோர்கள் பாராட்டி வந்ததினால் அதனைத் தனியாக சாசனங்களில் கூறினார்கள் எனக் கொள்ளலாம்.

4. கற்றுப் புல்:—இதனை the grace for the cows என்று மொழிபெயர்த்திருக்கின்றார்கள். கன்று என்ற பதம் இடைவலிந்து கற்று என்றாயிற்று. ஆகவே கற்றுப் புல் என்பது கன்றுகள் மேய்வதற்கு விடப்பட்ட புல் என்று பொருள் படும். அதாவது மேய்ச்சல் நிலம். நமது நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் கன்று காலிகள், கால்நடைகள் இவைகள் மேய்ப்பதற்காக நிலங்களைச் சாகுபடி செய்யாமல் விடுவது வழக்கம். இது விவசாயத்திற்கு அவசியமானது. இப்பொழுதும்கூட அதிகம் நிலம் படைத்தவர்கள் தங்கள் கால்நடைகளுக்காக ஒரு பாகத்தை வேளாண்மை செய்யாமல் மேய்ச்சல் நிலமாகப் புல் முளைக்க விடுவதுண்டு. முன் காலத்தில் கிராமப் பொதுவிலேயே இவ்விதம் நிலங்களை விடுவதுண்டு. இக்காலத்தில் அம்மேன்மையான கொள்கைகளை அதிகார வர்க்கத்தார் மறந்துவிட்டு மேய்ச்சல் நிலங்களில் கள்ளி, சப்பாத்தி முதலியவைகள் முளைக்கவிட்டும் மற்றும் குடிகளுக்கு வேளாண்மை செய்யவோ அல்லது வீடுகட்டவோ கொடுத்துவிட்டும் மேய்ச்சல் நிலம் இல்லாமல் செய்து விடுகிறார்கள். இது குடியானவர்களுக்கு ஏற்பட்ட ஒரு துர்ப்பாக்கியம் என்று சொல்ல வேண்டும்.

சாசன வாசகத்தில் கற்றுப்புல் என்பது மாத்திரம் குறிப்பிட்டிருப்பது நோக்கத் தக்கது. பசு, எருது, எருமை இவைகளுக்கு ஏற்பட்ட மேய்ச்சல் நிலத்தை குறிக்கவில்லை. ஆகவே நிலங்களை தானம் செய்யும்போது அப்பேர்ப்பட்ட பெரிய கால் நடைகளுக்கு ஏற்பட்ட மேய்ச்சல் நிலங்களைத் தானம் செய்வதில்லை என்று நாம் ஊகிக்கவேண்டும்.

நிலங்கள் தானம் செய்யப்படும்போது கன்றுக்குட்டிகள் மேய அவசியமாக இருக்கவேண்டிய புல் நிலத்தை மாத்திரம் அந் நிலத்தோடு கொடுக்கப்பட்டதே ஒழிய, மற்ற மேய்ச்சல் நிலம் கொடுக்கப்படவில்லை. ஆகவே பெரிய மேய்ச்சல் நிலங்களைத் தனியாக விற்பனை முதலியவைகள் செய்துவந்தார்கள் எனக் கொள்ளலாம். அல்லது அந் நிலங்களை விற்பனை செய்வதே கூடாது என்றும் கொள்ளலாம்.

(தொடரும்)

திருச்சி மலைக்கோயில்

மௌனசுவாமி மடத்து விபரங்கள்

(முன் கஉகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

எ-வது பட்டம் வைத்திலிங்கத் தம்பிரான் சுவாமி யவர்கள் நாளையில் துரை ஜமீன்தாரவர்கள் சார்வரி ௵ கலாபத்துக்கு திருச்சினாப்பள்ளிக்கு வந்திருக்கும்போது மேற்படி ஜமீன் ரெட்டியாரவர்களை அனுசரித்து அவர்களிடத்தில் தாயுமான சுவாமியின் உச்சிக்காலக் கட்டளை அபிஷேகம் நைவேத்தியத்திற்காக சர்வ மான்யமாக காட்டாம்பட்டி கிராமத்தை விட்டுக் கொடுத்து விசுவாசு ௵ சிலாசாசனம், தாம்பிரசாசனம் செய்து கொடுத்து ஷை காட்டாம்பட்டி கிராமத்தை சுவாமிக்குத் தத்தம்பண்ணி அந்தக் கிராமத்தின் வருமானத்தில் சுவாமி அம்மனுக்கும் அபிஷேக நிவேத்திய முதலாகியதுகள் நடத்திவைத்துக்கொண்டு வரும்படியாக சர்வ மானியமாக ரெட்டியார் அவர்களால் விடப்பட்டது காட்டாம்பட்டி கிராமம். ஷை கட்டளைக்கு படிக் கட்டளை சாமான் முதலாகியதும் அலாதியாய் வைத்துக்கொண்டு நடப்பி வைக்கும் படியாகக் கம்பத்தடியில் ரெட்டியார் அவர்கள் பேரால் அறையும் கட்டிவைத்து சிறப்பாக சுவாமிக்கு நடப்பி வைத்துக்கொண்டு வருகிறது. உச்சிக்காலக் கட்டளைக்காக ரெட்டியாரவர்களால் சர்வமான்யமாக விடப்பட்டது காட்டாம்பட்டி கிராமம்.

ஷை எ-வது பட்டத்தில் முன் தொண்டமானாரவர்கள் கட்டளைக்கு சிவஞானபுரந் துரையவர்கள் நாளையில் சாயரெட்சைக் கட்டளையில் அபிஷேக நைவேத்தியத்துக்காக திருக்கோகாணம் கோயிலில் சாமான்களும் கீரனூர் சுங்கத்தில் ரொக்கச்செலவுக்குப்

பணமும் கொடுத்து நடந்து வருவதில் மேற்படி சாமான்களையும் பணமும் வாங்க மனுஷாள் புதுக்கோட்டைக்குப் போய் வாங்கி வருவதில் இவ்விடமிருந்து போக்குவரத்து அவ்விடத்தில் காத்திருப்பதிலும் படிச்செலவில் தானே அதிகமாய்ச் செலவாகிப் போகிறதென்று துரையவர்களிடத்தில் சொல்லிக்கொண்டதில் அதின் பேரில் கோமங்கலம் கிராமம் மேற்படி ரூ. ௱௫௰ க்கு சர்வ மான்யமாக விட்டுக்கொடுத்தார்கள். அந்தப்படிக்குக் கொஞ்ச நாள் நடந்து வருகையில் துரையவர்கள் செலவுக்கு கட்டி வருகிறதா என்று கேட்டதில் செலவுக்குப் பத்தவில்லை என்று சொன்னதின்பேரில் உ௱௫௰ க்கு சர்வ மானியமாக விட்டுக் கொடுத்தது மன்னியில் மாத்தூர், மேக்குடி, கொட்டப்பட்டி, கொழுக்கட்டக்குடி, பிடங்கப்பட்டி, ஆதன்பட்டி, பொத்தப்பட்டி இந்த கிராமங்களிலெல்லாம் பாதி காவலாய் இருந்ததெல்லாம் எந்நேரமும் பாதி கவலென்றே எந்நேரமும் தொந்திரவு செய்கிறார்கள் என்று துரையவர்கள் சொல்லிக்கொண்டதில் ஷை பாதிக் காவல் வரும்படியும் ஷை மான்யம் கொட்டம்பட்டியில் செய் உ ம் மாத்தூரில் செய் உ ம் ஆக நஞ்சை செய் ச ம் விட்டுக்கொடுத்து பாதி காவல்காரரையும் கோவில் கிராமத்தின் சோலிக்குப் போக வேண்டாமென்று உத்திரவு செய்தார்கள். மேற்படி வருமானங்களெல்லாம் சேர்த்து உச்சிக்காலத்தில் சுவாமி அம்மனுக்கும் அபிஷேக நைவேதனமும் செம்மையாய் நடத்தி வைத்துக்கொண்டு நிவேத்தியமான பிரசாதத்தில் தினம் பனிஇரண்டுபேர் தேசாந்திர பிராமணாளுக்கு சனத்துக்கு இரண்டு சாதம் வீதம் கோவிலில் கொடுத்துக்கொண்டு வரும்படியாகத் திட்டஞ்செய்து நடந்து வருகையில் ஷை வைத்திலிங்கத் தம்பிரான் சுவாமிகள் யோசித்துப் பரதேசி பிராமணாள்கள் வெரும் அன்னத்தை வாங்கிக் கொண்டு போய் சாப்பாட்டிற்கு அவதிப்படுகிறார்களென்று மடத்தில் தானே தொண்டமானார் போரால் சத்திரங் கட்டிவைத்துப் பிராமணாள் 12 பேருக்கும் அன்னம் பூர்த்தியாய்க் கொடுக்கும்படியாக கமல பாத்திரஞ் செய்து கோவிலில் அன்னம் வடிசில் செய்து ஷை கமல பாத்திரத்தில் எடுத்து வைத்து அந்த அன்னத்துடனே நாலு கறியும் பாசி பருப்பும் நெய் தயிர் பாயசமும் இதுவெல்லாம் வைத்து சுவாமிக்கு நைவேத்தியமாகிய பின் சத்திரம் கொண்டுவந்து சேர்த்து சத்திரத்தில் குழம்பு ரசம் செய்து தின காலம் பணத்து

மோரும் இதுவெல்லாம் சத்திரத்தில் தயார் செய்து வைத்துக் கொண்டு பரதேசி பிராமணுளாகப் பார்த்துச் சத்திரத்தில் விட்டு போசனம் செய்த உடனே சந்தனம் சுகந்தம் தாம்பூலங்களும் கொடுத்துப் புதுக்கோட்டைத்தொண்டைமான் அவர்கள் பேரால் ஆசீர்வாதம் செய்யச்சொல்லி இப்படியாக நடந்துவருகையில் இது விஷயத்தை இவ்விடத்திலிருந்து போக்குவரத்தாய் இருக்கப் பட்ட பிராமணுள்கள் தொண்டமானிடத்தில் சொல்லிக்கொண்டு வந்ததினுல் மடத்தில் அப்போது கார்வாராயிருந்த சுப்பிரமணிய பிள்ளை புதுக்கோட்டை தொண்டமான் அவர்களிடத்துக்குப் போயிருக்கும்போது ஷ்டி தொண்டமான் அவர்கள் மடம் கார்வார் சுப்பிரமணிய பிள்ளையைப் பார்த்து நாம் பிராமணபோஜனத்துக்கு ஊதிபங்கள் ஒன்றும் விடவில்லையே நம்முடைய பேரால் பிராமண போஜனம் நடக்கிற வயணம் என்ன ? தங்களுடைய சமஸ்தானம் நன்ருய் செழித்துப் பிரபலமாய் இருக்கவேண்டுமென்று வைத்தி லிங்க மௌனத் தம்பிரான் இவ்விடம் அரண்மனை யவர்களின் பேரால் சத்திரமும் கட்டிவைத்துஷ்டி சத்திரத்தில் தினம் 12 பேர் பிராமணுளுக்குப் போஜனம் நடத்திவைக்கிறதென்று சொன்னதின் பேரில் சந்தோஷப்பட்டுக்கொண்டு உடனே வெண்ணமங்கலப் கிராமமும், கொழுப்பட்டியில் புஞ்சையில் 16 அடிக்கோலால் குழி உயஎகூஅா வையும் சாயரட்சை அபிஷேக நைவேத்தியத்துக்கும் பிராமண போஜனத்துக்குமாக ஷ்டி கிராமங்களை விடச்சொல்லி உத்திரவாகி காளாயுக்தி ஷூ ஷ்டி வெண்ணமங்கலம், கொழுப் பட்டி புஞ்சையும் இதற்கு முன் நடந்த கோமங்கலம் இடையப் பட்டியும், பாதி காவல் வருமானமும் இதுவெல்லாம் ஒன்ருய் சேர்த்து ஷ்டி வருமானங்களுக்குத் தகுந்தபடி அபிஷேக நைவேத் தியங்களுக்கும் பிராமண போஜனத்துக்கும் கோவில் மாகாணம் கிராம ஆள் மாகாணத்திற்கும் திட்டக்கணக்கு ஏற்படுத்தி அந்தக் கணக்குப்படிக்கு கட்டளை நடத்திக்கொண்டு வரும்படிக்கும் சுப்பிரமணிய பிள்ளைக்கு ஷூக்கு சயஉ ஸ்தானுதிபதி சம்பள மென்று ஏற்பாடுசெய்து அந்தப்படியே தொண்டமானவர்கள் உத்திரவு செய்து தாம்பிரசாசனமும் சிலாசாசனமும் காளயுக்தி ஷூத்தில் செய்துகொடுத்தார்கள். அந்தப்படியே நடப்பிவைத்து வருகின்றது.

ஷை ௭-வது பட்டம் வைத்திலிங்கத் தம்பிரான் சுவாமியவர்கள் நாளையில் லெக்கய நாயக்கரவர்கள் தாயுமான சுவாமி பூசைக் கட்டளைக் கென்று ஷையார் சீமையைச் சேர்ந்த மாவனூர் சொந் தக்கூறிச்சாம்பட்டி கிராமத்தை சர்வ மான்யமாக லெக்கய்ய நாயக்கரால் விடப்பட்டது.

ஷை ௭-வது பட்டத்தில் பூச்சய நாயக்கர் தாயுமான சுவாமி யின் அபிஷேக நைவேத்தியத்துக்கு பூச்சய நாயக்கரவர்கள் ஷை யார் சீமையில் கோவில்ப் பட்டியைச் சேர்ந்த தில்லம் பட் டிக் கிராமத்தை சர்வ மானியமாக விடப்பட்டு சுவாமியின் பூசைக் கட்டளை நடப்பிவைத்துக் கொண்டு வரும்படியாக வைத்திலிங்கத் தம்பிரான் சுவாமிகளிடம் பூச்சய நாயக்கரவர்கள் சர்வ மானிய மாக விடப்பட்டது தில்லம்பட்டி கிராமம்.

ஷை ௭-வது பட்டத்தில் தாயுமான சுவாமியின் அபிஷேகத் துக்காக கத்தலூர்—என்பவர் ஷை கத்தலூரில் நஞ்சையில் செய் ௫-ம் புன்சையில் பதிங்கல விரையடிக் காடும் ஷை வைத்திலிங்கத் தம்பிரான் அவர்கள் மாரிபமாக சர்வமான்யமாக விடப்பட்டது கத்தலூர் பட்டவர்த்தி.

நவாபு சாயபு அவர்கள் ராஜரீகத்தில் ௭-வது பட்டம் வைத்தி லிங்கத் தம்பிரான் அவர்கள் நாளையில் உண்டாகிய ஊதிபம் காட் டாம் பட்டிக் கிராமம்-௧ கோமங்கலம் கிராமம்-௧ இடையப்பட்டி கிராமம் ௧. வெண்ண மங்கலம் கிராமம் ௧. பொத்தம் பட்டிக் கிராமம் ௧. கொழுப்பட்டியில் புஞ்சையில் ௨௰௭கூஅா குளி நில மும் தொண்டமானுர் பாதுகாவல் பொருப்புப் பணமும், தில்லன் பட்டிக் கிராமமும், கறிச்சான் பட்டிக்கிராமமும் கத்தலூர் பட்ட வர்த்தியும் இந்த ஊதிபங்களெல்லாம் வைத்திலிங்கத் தம்பிரானவர் கள் நாளையில் உண்டாகிய ஊதிபங்கள்.

(தொடரும்)

“இப் பொது உண்மையை மறக்கவேண்டாம்: நம்மை நாமே வருத்திக் கொண்டே அல்ல லுழக்கின்றோம்; அஃதாவது நம் முடைய எண்ணங்களே நம்மை நெருக்கி அல்லலுழக்கச் செய் கின்றன.”

—எப்பிக்டெட்டஸ்.

அறிவியற் பகுதி-Science

ஒளிநூல்—(Astronomy)

[திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்]

(முன் கூ௯-ம் பக்கத் தொடர்ச்சி)

அப் பெரியார் பிரிந்தபின்னர், அறிஞர் பலர் தோன்றிச் சோதிக்கலையை வளர்ப்பாராயினர். தென்மார்க் (Denmark) நாட்டினராகிய டைகோ பிராகி (Tycho Brahe) என்பவர் எண்ணற்ற ஆராய்ச்சிகளைச் செய்து அவர்களுள் முதன்மை பெற்றார். டாலமி முறையை ஒருவாறு தழுவிய ஒரு புது முறையை அவர் தோற்றுவித்தார். கோப்பர்நிக்கஸ் முறையை மறுத்து, தம் கொள்கையை நிலை நாட்ட அவர் வீணாக முயன்றார். அவர் எழுதிய கணக்கிறந்த நூல்கள் அவருடைய போராற்றலை எடுத்துக் காட்டுகின்றன. அவருடைய மட்டற்ற அறிவும் முயற்சியும் தவறான வழியிலே போய் வீணாயின. அவர் மண்ணுலகத்தை அசைவற்ற பொருளாக்கி அதனை இரவி மதிகள் சுற்றிவருவதாக மொழிந்தார். ஏனைய கோள்களும் பூமியையே சுற்றிவருகின்றன என்ற டாலமியின் கூற்றுக்கு மாறாக அவர் அவைகள் இரவியைச் சுற்றிவருவதாகப் புகன்றனர். ஆனால் அவர் சோதிகளைப்பற்றிக் கண்டறிந்துள்ள பல மெய்க்கொள்கைகளின் முன் இப்பிழைகள், பெரும் பிழைகளேயாயினும், மிகச் சிறியனவாகவே தோன்றுகின்றன. டைகோ பிராகியைப்போல சோதிக்கலையை அணி பெறச் செய்தோர் என்றும் இருந்ததில்லை.

டைகோ காலத்தில் வாழ்ந்த சிறந்த வானநூற்புலவருள் ஒருவர் புகழ்பெற்ற கெப்ளர் என்பவர். கோள்களின் அயனங்களை உண்மையாகக் கண்டறிந்தவர் அவரே. இரவி மண்டிலத்திலுள்ள கிரகங்களின் அசைவின் தன்மையையும், அவைகள் ஒன்றுக்கொன்று உள்ள தூரத்தையும் மெய்ம்மையாகக் கணித்துணர்ந்தவர் அவரே. அவர் தெளிந்து வெளிப்படுத்திய உண்மைகளே இக்காலத்தில் மிளிரும் ஒளிநூற்கலைக்கு அடிப்படையாயின. கெப்ளர் கி. பி. 1571-ல் பிறந்து 1631-ல் இறந்தார்.

அவருக்குப் பின் புகழ் பெற்றவர் கலிலீயோ என்ற மூதறிஞர். அவர் கி. பி. 1564ல் பிறந்தார். அவர்தான் முதன்முதலாக தொலைநோக்காடி (Telescope) யைப் பயன்படுத்தத் தொடங்கியவர். அவர் அதுவரை ஒருவரும் கண்டறியாத பல காட்சிகளை அதன் மூலமாகக் கண்டார். அவருடைய மெய்க்காட்சிகளால் கோப்பர் நிக்கஸ் முறையானது வலிபெற்று விளங்குவதாயிற்று. கோப்பர் நிக்கஸ் முறையை மெய்ப்பிக்க அவர் செய்த முயற்சிகள் போப்புமதக் கோட்பாடுகளுக்கு (Papacy) மாறாக இருந்தபடியால் அவைகளைக் குருட்டுத்தனமாக நம்பி யிருந்தவர்களுடைய சினத்திற்கு அவர் ஆளானர். அதனல் அவர்கள் அவரை ஓர் இருட்டறையில் அடைத்து வைத்துத் துன்புறுத்தினர்கள். ஆனல் ஓராண்டின் பின், அவர் தமது கொள்கையைப் பிறருக்குக் கூறுதிருப்பதோடு தாமும் விட்டுவிடவேண்டு மென்ற கட்டுப்பாட்டுடன் விடுதலை பெற்றார். அவர் கி. பி. 1642ல் மாண்டனர்.

பூமி சுற்றுகிற தென்ற உண்மையை மக்கள் தெளிவாக அறிந்து கொள்ளத் தொடங்கினர். அதனல் அதற்குத் தடையாகச் செய்யப்பட்ட கொடுமைகளெல்லாம் நாளடைவில் பயனற்றனவா யொழிந்தன.

கலிலீயோ காலத்தில் வேறு சில ஒளி நூற் புலவரும் இருந்தனர். அவருள் பெஅரன் (Baron) பட்டம் பெற்ற நேப்பியர் (Napier) என்பார் ஒருவர். அவர் லாகரிதம்ஸ் (Logarithms) என்று பெயர் பெற்ற கணக்கு அட்டவணைகளை கி. பி. 1614ல் பதிப்பித்தார். பேயர் (Bayer) என்பார் யுரானேமீடிரியா (Uranometria) என்ற நூலை வெளிபடுத்தி இசை பரப்பினர். அந்நூலில் அவர் விண்மீன்களைக் குறிப்பதற்கு இட்ட அடையாளங்களாகிய கிரேக்க எழுத்துக்களே இன்றும் பயன்பெற்று நடைமுறையில் இருக்கின்றன.

காசண்டி என்ற பிரெஞ்சுப் புலவர் இரவிமண்டலத்தின் அருகே புதன் (Mercury) என்ற கிரகத்தைக் கண்டார். ஹாராக்ஸ் என்ற ஆங்கிலப் பேரறிஞர் கி. பி. 1633ல் தமது நண்பராகிய கிராப்டிரீயிடம் "கி. பி. 1639 நவம்பர்மீ 24உ யன்று வெள்ளி (Venus) இரவிமண்டலத்தைக் கடந்து செல்லும்" என்று கூறினர். வெள்ளி குறித்தநாளன்று இரவிமண்டிலத்தைத் தாண்டிப் போனதை அவர்களிருவரும் கண்ணாரக் கண்டனர். இத்தகைய நிகழ்ச்சியை முதன்முதலாகக் கண்டறிந்தவர் அவ்விருவரே.

ஹாராக்ஸ் தமது ஆராய்ச்சியில் முதிர்ந்தவராய், திங்களைப்பற்றிய ஒரு புதுக் கொள்கையை மொழிவாராயினர். அது பெருகிய நுண்ணறிவின் விளைவாக இருந்ததனுல் சர் ஐசக் நியூட்டன் என்ற பெரியாரின் கவனத்தைக்கூடக் கவர்வதாயிற்று. ஆனல், அம் மணியை ஒளிநூற்புலவருலகம் விரைவில் இழந்தது. அப்பேரறிஞர் கி. பி. 1640ல் தமது இருபத்துநான்காவது வயதில் இறைவ ரடியை எய்தினர்.

டான்ட்ஸிக் (Dantzic) என்ற நகரத் தலைவராக இருந்த எவீலியஸ் (Hevelius) என்பார் அந்நகரில் ஓர் ஆராய்ச்சிச்சாலையை நிறுவினர். அதில் அவர் பல அரிய கருவிகளை அமைத்திருந்தார். ஞாயிற்றின்மேலுள்ள களங்கங்களைப்பற்றியும், வால்வெள்ளி களின் இயற்கையைப்பற்றியும் அவர் பலவாறு ஆராய்ந்து பல முடிவுகளைக் கண்டார். அசையாதிருக்கும் விண்மீன்களைப்பற்றி அவர் தயாரித்த அட்டவணை மிகவும் நுட்பமாகவும் சரியாகவும் இருக்கிறது. திங்களின் உடலிலுள்ள களங்கங்களைப்பற்றித் திட்டமாக விவரித்துரைத்தாருள் முதல்வர் அவரே.

தொலைநோக்காடி (Telescope) யில் செய்யப்பெற்ற சீர்திருத்தங்கள் மேலும் பல புதுமைகள் வெளிப்படுவதற்குக் காரணமாயின. புகழ்சிறந்த ஹியூஜென்ஸ் (Huygens) என்பார் இரண்டு உயர்ந்த கண்ணுடிகளைச் செய்தார். அவற்றுள் ஒன்று பன்னிரண்டடி நீளமும், மற்றது இருபத்துநான்கடி நீளமும் உடையவை. அவைகளின் உதவியால் அவர் சனி (Saturn)யின் நான்காவது மதி (Satellite) யைக் கண்டுபிடித்தார். அதன்பின் அவர் இடைவிடாது முயன்று அச் சனிக்கோளைச் சூழ்ந்திருக்கும் வளையத்தையும் பார்த்தறிந்தார். கடிகாரத்தை இயக்கும் தொங்கட் டானை (Pendulum) அமைத்துக் கடிகாரம் செய்யும் விதத்தை முதன்முதலாகப் பயன்படுத்தியவர் அவரே. அவர் தமது அறுபத் தாருவது வயதில், கி. பி. 1695ல் விண்ணுலகடைந்தார்.

அக்காலத்தில்தான் இலண்டன்மாநகரத்தில் உள்ள அரசாங்க ஆராய்ச்சிக்கழக (Royal Society of London) மும், பாரிஸ் நகரத்திலிருக்கிற பெரியார் ஆராய்ச்சிக் கழக (Royal Academy of Paris) மும் தோன்றின. அவைகளில் அறிவாற்றலிற் சிறந்த பல புலவர்கள் விளங்கினர். பாரிஸ் ஆராய்ச்சிச்சாலையில் முதன்முத லாகத் தலைமை பூண்டார் டாமினிக் காசினி (Dominic cassini) என்பவராவர். அவர் தலைமை பூண்ட சின்னுளில் சனிக்கோளின் முதலாவது, இரண்டாவது, மூன்ருவது, ஐந்தாவது மதிகளைக் கண்டுபிடித்தார். மேலும், வியாழன் (Jupiter), செவ்வாய் (Mars), வெள்ளி (Venus) ஆகிய கோள்கள் நமது பூமியைப்போலத் தம்மைத்தாமே சுற்றிக்கொள்கின்றன என்ற உண்மையையும்

அவரே பார்த்தறிந்தார். அவர் கி. பி. 1712-ல் இறைவர் திருவடி நீழலை எய்தினார்.

ஒளி இடையீடில்லாமல் தொடர்ந்து பரவும் தன்மையது என்ற உண்மை ரூமர் (Roemer) என்ற தென்மார்க் நாட்டினரால் வெளிப்படுத்தப் பெற்றது. சோதிநூற் கலையில் இஃது ஒப்பற்ற அடிப்படையான உண்மையானதால் ஒளிக்கலை யுலகில் ரூமர் அழியாப் புகழ்பெற்று விளங்குகின்றார். (தொடரும்)

இருவகைச் செல்வம்.

க. பயனுடைச் செல்வம்

1. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (குறள்-215)

2. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின். (குறள்-216)

3. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். (குறள்-217)

1 பேரறிவாளனது செல்வம் ஊரா ருண்ணும் குளம் நிறைந்தாற் போல்வதாம்.

2. பிறர்க்கு உதவுவானது செல்வம் ஊர் நடுவில் பயன்படு மரம் பழுத்தது போல்வதாம்.

3. பெருந்தகைமையுடையானது செல்வம் தன் எல்லா உறுப்புக்களாலும் பிணிகளுக்கு மருந்தாகியுதவும் மரத்தைப் போல்வதாம்.

உ. பயனிலாச் செல்வம்.

1. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று. (குறள்-1000)

2. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. (குறள்-1007)

3. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத் தற்று. (குறள்-1008)

1. பண்பிலானது செல்வம் ஆவின்பால் கலத்தின் குற்றத்தினால் இன்சுவைத்தாகாது கெட்டாற் போல்வதாம்.

2. ஒரு பொருளு மில்லாதவர்க்கு உதவாதவனது செல்வம் வீணே கழிதல் மிகவும் அழகுள்ள ஒரு பெண் தன்னைக் கொடுப்பாரின்மையால் கணவனில்லாது மூப்படைவது போல்வதாம்.

3. பிறரால் இச்சிக்கப்படாதவனது (உலோபி) செல்வம் ஊர் நடுவே எட்டி மரம் பழுத்தது போல்வதாம்.

வ. சுப்பையா பிள்ளை.

இயற்கைப் பொருணூல்--Natural Science

உயிரினங்களின் நிறவேறுபாடுகள்

[திருமதி. குணமாணிக்கத் தம்மையார் M.A.]

(முன் கரூஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காப்பு நிறத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அஃதாவது :— 1. குறிப்பு நிறம் 2. ஒப்புமை நிறம்.

குறிப்புநிறம், கூட்டங் கூட்டமாக வசிக்கும் பறவைகளினிடத்தும், விலங்குகளினிடத்தும் காணப்படும். முயல்கள் கூட்டங் கூட்டமாக வசிக்கும். கூட்டத்திலிருந்தால் தான் அவைகளுக்கு நன்மை. முயல்வாலின் அடிப்புறம் வெண்மையாக இருக்கிறது. முயல்கள் பல கூடி ஓரிடத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் போது ஏதாவது ஓசை உண்டானால் அவ்வோசையைக் கேட்ட முயல் தன் வாலை மேலே தூக்கிக்கொண்டு தன் வளையினிடம் ஓடும். இங்ஙனம் அஃது ஓடும் போது அதன் வாலின் அடிப்பாகத்தி லுள்ள வெண்மை நிறம் வெளியே தெரியும். அதைக்கண்ட மற்ற முயல்கள் ஏதோ கெடுதி உடனே வரப்போகிறதென்று அறிந்து தத்தம் வளைகளிற் போய்ச் சேரும்.

கூட்டங் கூட்டமாக, ஊர் ஊராக, வெப்பதட்ப நிலையைப் பொறுத்துச் செல்லும் பறவைகளுக்குச் சிறகுகளிலும் வாலிலும் இத்தகைய குறிப்புநிறம் உண்டு. பறந்து செல்லும் போது இது வெளியில் தெரியும்; பின்னால் வரும் பறவைகள் அவை தம்மினமென்று தெரிந்து பின் தொடர்ந்து செல்லும்.

ஒப்புமை நிறம் பட்டுப் பூச்சிகளினிடத்துச் சிறப்பாய்த் தோன்றுகிறது. இப்பூச்சிகளில் சில பறவைகளுக்குத் தகுந்த உணவாகவும் சில அல்லன வாகவும் உள. உணவாகக் கூடிய பூச்சிகளில் சில வகைகள் (Species) ஆகாரத்திற்கு உதவாத பட்டுப் பூச்சிகளின் நிறத்தை உடையன. இதைக் காணும் பட்சி, தனக்காகாத பூச்சிகளென்று அவற்றைப் பிடித்துக் கொல்லாமல் இருந்துவிடும். இப்படியே நஞ்சில்லாச் சில பாம்புகள் நஞ்சுள்ள பாப்புகளை ஒத்திருக்கின்றன.

இனிப் போலி நிறத்தைக் கருதுவாம். புலி ஏன் வரிகளை யுடைய (Stripes) தாக இருக்கிறது? இது புல்லடர்ந்த காட்டில் புதரினிடையே இருக்குமேயானால் இதைக் காண்பவர் புல்லென ஏமாறுவர். புலி, ஒட்டையைப் போல் தற்காப்புக் கல்லாமல், பிற உயிர்களை வஞ்சிக்க ஏதுவாக இவ்வாறான அமைப்பைப் பெற்றிருக்கிறது. அது புதரினிடையே பதுங்கி இருக்கும் போது, அதைப் புல்லென எண்ணிப் பல சிறுவிலங்குகள் அச்ச மின்றி அவ்வழியே செல்ல, தன் மறைவிடத்திலிருந்து, அப்புலி அவை மீது பாய்ந்து அவற்றைக் கொன்று உதிரத்தை உறிஞ்சி விடுகிறது. ஒட்டையின் நிறம் தற்காப்பு நிறமாகும், புலியினது நிறம் போலி நிறமாகும்.

தீங்கிழைக்க மாட்டா தென்று எண்ணக் கூடிய தன்மையை யுடைய புலியைப் போன்றிருப்பது மல்லாமல் தமக்கு இரையாகும் உயிரினத்துக்கு விருப்பமான உணவோ அல்லது வேறு ஒரு பொருளோ போல் தோன்றி, அதைத் தம்மிடம் இழுக்கும் உயிர் வகையும் உண்டு. பார்ப்ஸ் (Mr. Forbes) என்ற மேனாட்டறிஞர் தாம் கண்ணால் கண்ட இத்தகைய நிகழ்ச்சியைக் கூறியுள்ளார்.

அவர் ஒரு வண்ணாத்திப் பூச்சியைப் பிடிக்குமாறு கையில் பிடித்த வலையுடன் அதைப் பின் தொடர்ந்து சென்றாராம். அஃது ஒரு பறவையின் மலத்தின்மேல் போய்த் தங்கிற்றாம். இவ்வளவு அழகுள்ள இந்தப்பூச்சிக்கு அந்த உணவில் என்ன சுவை இருக்கு மென்று எண்ணிக்கொண்டே அஃது என்ன செய்கிறதென்று பார்க்க, அவர் கையில் வலையுடன் மெதுவாக அதனருகில் சென் றார். அவர் மிக்க அருகில் வந்தும் அஃது அசையவில்லை; பறந்து ஓடவுமில்லை. அதனை அவர் மெதுவாகப் பிடித்தார். அப்பொழு தும் அஃது அசைவற்று இருந்தது. ஆனால், அவர் அதனை இலையி னின்றும் எடுக்க முயன்றபோது அஃது அம்மலத்தில் ஒட்டிக் கொண்டு வரவில்லை. அம்மலம் பசையுள்ளதோ என்ற ஐயம் ஏற்படவே அவர் அதனைத் தம் விரலால் தொட்டார். அவர் தொட்டவுடனே அது மலமன்று என்றும், ஓர் உயிருள்ள பூச்சி யென்றுங் கண்டு திடுக்கிட்டார். அஃது ஒருவகையான சிலந்தி. அது தன் இரையைப் பிடிக்கத் தனது பல உறுப்புக்களிலும் தக்க நிறங்காட்டி, பறவையின் மலத்தை ஒப்ப இருந்து, பட்டுப்பூச்சி

களை ஏமாற்றி வந்தது. இச்சிலந்தியைக் கவர்ச்சி நிறமுள்ள உயிரினங்களோடு தான் சேர்த்தல்வேண்டும்.

சில உயிரினங்கள் எச்சரிக்கை நிறத்தைக்கொண்டுள்ளன. இவை நஞ்சாலோ அல்லது வேறுவகையாலோ தீங்கிழைக்கக் கூடியனவாக இருக்கின்றன. கொட்டும் குளவிகளும், ஈக்களும் பளிச்சென்று விளங்கும் நிறங்களையுடையன. அவை "என்னிடம் வந்தால் நான் கொட்டிவிடுவேன். என்னை என் நிறத்தால் அறிந்துகொள்ளுங்கள்" என்று எச்சரிக்கை செய்வதுபோன்ற நிறமுடையனவாக இருக்கின்றன. ஒரு முறை கொட்டுண்டவர் இக்குளவியைக் கண்டால் ஒதுங்கிச் செல்வர்.

இப்படியே நாகப்பாம்பின் படமும் எச்சரிப்புக்காக உள்ளது. கடவுள் தமக்குக் கொடுத்திருக்கும் இயற்கை அறிவாலும், அந் நாகப்பாம்பின் நஞ்சால் இன்னொரு உயிர் இறந்ததைக் கண்ட பழக்கத்தாலும், இப்படமுடைய பாம்பைக் கண்டதும் அதை எதிர்க்க வல்லமையில்லாத உயிர்வகைகள் விலகித் தொலைவிற் செல்கின்றன.

இதுவரை, நிறங்களால் இன்னின்ன பயன்கள் உண்டென்று கண்டுவந்தோம். ஆனால், சிலவகை நிறவேறுபாடுகளுக்குக் காரணந் தெரிந்திலது. எடுத்துக்காட்டாகப் பறவைகளை எடுத்துக்கொள் வோம்.

புள்ளினத்தில் ஆண்பறவைகள் அழகிய நிறங்களையுடைய வாகவும் பெண்பறவைகள் அங்ஙனம் இல்லாமலும் இருப்பது நம் எல்லோருக்கும் கண்கூடாகத் தெரிந்ததே. ஆண்மயில் எவ்வளவு அழகான தோகையை உடைத்தாயிருக்கிறது. பெண்மயிலுக்கு அத்தன்மையதான தோகை ஏன் இல்லை?

பெண்பறவை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல் வேண்டும். இது முடிவெய்தும்வரையில் எதிரிகள் கண்ணுக்கு அகப்படாமல் இருப்பது இன்றியமையாதது. இதனாற்றான் இஃது ஆணைப் போல வனப்புடையதாக இல்லை. ஆணும் பெண்ணும் ஒத்த வனப் புடையதாக இருக்குமேயானால், அவை சந்துகளிலும், பொந்து களிலும் கூடுகட்டி முட்டையிடுபவையாக இருக்கும். கூட்டில் இருந்தால் பெண்பறவை வெளியில் தெரியாது. அதனால் அஃது அழகாகவே இருக்கலாம்.

சில பறவைகளில் ஆணைவிடப் பெண் ஒளியும் பொலிவு முள்ள நிறங்களையுடையன. இவைகளை ஊன்றிப் பார்த்தால், நாம் வியக்கும்படியான ஓர் உண்மை வெளிப்படுகிறது. அஃதாவது இவ்வினத்தில் பெண்பட்சிக்கு முட்டையிடுவது தவிரப் பின் அதைக் காப்பாற்றும் வேலை இல்லை. அஃது முட்டையிட்டவுடன் ஆண்பட்சி அந்த முட்டைகளின்மீது உட்கார்ந்து அடைகாக்கிறது. இவ்வேளைகளில் ஆண் மறைந்திருக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் அது பொலிவற்றிருக்கிறது.

அழகின்மைக்கு ஒருவாறு காரணம் தெரிகிறது. ஆனால் அழகுடைமை ஏன்? இதைப்பற்றி ஒரேமுகமான கொள்கை இல்லை. நுண்ணூலாராய்ச்சியர் பலரும் பல கொள்கைகளைக் கொண்டுளர்.

டார்வின் (Darwin) என்பவர், பெண்பறவை ஆணிடம் அசினுடைய பொலிவிற்காகக் கூடுகிறதென்றும் அதனாற்றான் ஆண் இப்படி அழகுடையதாய் விளங்குகிறதென்றும் கூறியுள்ளார்.

சிலர் வேறுகாரணம் காட்டுகின்றனர். அஃதாவது பெண் பறவைக்கு முட்டையிடுவதிலும் குஞ்சு பொரிப்பதிலும் அதன் வலிமை குறைந்துவிடுகிறதென்றும், ஆணிற்கு இவ்வலிமை குறையாமல் நிற்கிறதென்றும், இந்த அளவற்ற வலிமை, நிறமும் கொண்டை முதலிய உறுப்புக்களும் உண்டாக்குவதில் செலவாக்கப்படுகிறதென்றுங் கூறுகின்றார். இன்னுஞ் சிலர் வெவ்வேறு காரணங்களைக் காட்டுகின்றனர். அவைகளை ஆராயப் புகுவோமாயின் மிகவும் விரியும்.

பறவைகளின் நிற அமைப்பிற்குக் காரணம் விளங்காவிடினும்; பட்டுப்பூச்சி மலர் முதலியவை நிறத்தில் ஒளிர்வது இன்னதற்காக என்று ஒருவாறு துணிவாகச் சொல்லலாம். அஃதாவது தம் இனத்தின் பெருக்கத்திற்கேயாம்.

கூட்டுப் புழுவாக இருந்து, பட்டுப்பூச்சியான பிறகு, அது மிகக் குறைந்த வாழ்நாளைக் கொண்டிருக்கின்றது. இந்தக் குறுகிய வாழ்நாளில் அது தன் இனத்தைப் பெருக்க வழிதேடல் வேண்டும். அதற்காக ஆணும் பெண்ணும் கூடுதல் வேண்டும். நிறத்தில் மிளிர்ந்தால் தமக்கிருக்கும் குறுகிய காலத்தில் ஒன்றை யொன்று கண்டு கூடுவது எளிது.

மலர்களும் மரத்தின் இன வளர்ச்சிக்காகவே பல நிறங்களைக் கொண்டுள்ளன. பூக்களிலும் ஆண்பூவும் பெண்பூவும் உள. இவற்றின் தாது கலந்தால்தான் மலரில் கரு உண்டாகும். இப்படிக் கலப்பதற்கு வண்டுகளும், பூச்சிகளும், குருவிகளும் உதவியாயிருக்கின்றன. அவற்றைத் தம்மிடம் வரும்படி செய்ய, மலர்கள் தம்முள் தேனுண்டாக்கி, நறுமணத்துடனும் அழகிய நிறங்களுடனுங்கூடி விளங்குகின்றன. இங்ஙனம் மணத்தாலும் நிறத்தாலும் இழுக்கப்பட்டுப் பூச்சியோ பறவையோ வண்டோ அவற்றினிடஞ் செல்கின்றன. அவ்வுயிரினங்களின் கால்களிலோ உடம்பிலோ அப்பூக்களின் தாது ஒட்டிக்கொள்கிறது. பிறகு அவை வேறு மலர்களிடஞ் சென்றால் அவற்றின் மேல் ஒட்டியிருக்கும் தாது அம்மலர்களின் தாதோடு கலக்கிறது.

இரவில் மலரும் பூக்களுக்கு நிறம் இருப்பதில் யாதொரு பயனுமில்லை. ஆகையால், அவை வெண்மையாக இருக்கின்றன. ஆனால் அவை நிறத்திற்குப் பதிலாகப் பகலில் அலரும் பூக்களைக் காட்டிலும் நறுமணத்தை மிகுதியாகக் கொண்டிருக்கின்றன.

“ - - - நிசியலர் மலர்க்கு
வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்
எவ்வணம் அவற்றின் இட்டநா யகராம்
ஈயினம் அறிந்துவந்து எய்திடும்? அங்ஙனம்
மேயிடில் அன்றோ காய்தருங் கருவாம்?
இவ்விதம் நோக்கிடில் எவ்விதத் தோற்றமுஞ்
செவ்விதிற் பற்பல காரணச் செறிவால்
அவ்வவற் றுள்நிறை யன்பே ஆக்கும்”

—மனோன்மணீயம்

(~~தொடரும்~~)

“ஒரு நாளேனுஞ் செல்வழி யறியேன்; ஆயினும், அறிந்த தொன்றுண்டு; அஃதென்னெனின், நாள்தனை நல்கும் நல்லோன் நலமுடன் நல்வழி யுய்ப்பான்; நம்பியே அருங்கவல் ஒழிக.”

—ஜான் ஆக்ஸேன்ஹாம்.

மொழிபெயர்ப்பு-Translation

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் M.A.,B.L.]

கபிலர்

இயற்றிய

இன்னா நாற்பது

Of Unpleasant Things: Forty (Stanzas)

By

KAPILAR.

கடவுள் வாழ்த்து

க. முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா
பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா வாங்கின்னா
சத்தியான் றடொழா தார்க்கு.

1. It is unpleasant not to worship the feet of the Triple-eyed Lord Siva; it is unpleasant not to contemplate Brahma, whose vehicle is the beautiful swan; it is unpleasant to forget the Lord, who wields the wheel, Vishnu; likewise it is unpleasant not to worship the sacred feet of God Kumara.

நூல்

உ. பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
தந்தையில் லாத புதல்வ னழகின்னா
அந்தண ரில்லிருந் தூணின்னா வாங்கின்னா
மந்திரம் வாயா விடின்.

2. A house without kinsmen is unpleasant; the beauty of an orphau is unpleasant; to eat in the house of a brahmin is unpleasant; likewise unpleasant is good counsel when it is unavailable.

ங. பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா
ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா

பாத்தில் புடைவை யுடையின்னா வாங்கின்னா
காப்பாற்றா வேந்த னுலகு.

3. It is unpleasant to have dogs and fowls entering the house of brahmins; very unpleasant is unruliness in a wedded wife; unpleasant it is, not to have spare clothes for a change; likewise very unpleasant is the realm of an unprotecting King.

௪. கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

4. It is unpleasant to live under the rule of wicked tyrants; it is unpleasant to cross deep waters without a raft; the friendship of those who speak harsh words is unpleasant; unpleasant it is to live with a mind always agitated.

௫. எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

5. The farmer without bulls finds the wetness of the fields unpleasant; it is unpleasant to lose use of weapons and turn one's back to the enemy; it is unpleasant to quarrel with the fortunate; most unpleasant, to do harm to the powerful.

௬. சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
உறைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றி யாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை.

6. Unpleasant to guard a hedgeless crop of sugar-cane; unpleasant to live in a thatched roof full of holes; unpleasant is unlawful rule; unpleasant whatever is done without proper thought.

௭. அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா
இடும்பை யுடையார் கொடையின்னா வின்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல்.

7. The hard words of the just are unpleasant; the laziness of soldiers on the battle-field is unpleasant; the gift of the poor is painful; the harsh words of the cruel are unpleasant also.

அ. ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா
நாற்ற மிலாத மலரி னழகின்னா
தேற்ற மிலாதான் றுணிவின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

8. The weapons borne by a man without energy are unpleasant; the beauty of a scentless flower is unpleasant; the starting of a business by one, who has no clear idea of it, is unpleasant; unpleasant too is the speech of one who observes not etiquette.

கூ. பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலி னெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு.

9. It is unpleasant when people whose heart is clear as daylight have not some other good qualities also; uupleasant if good friends are heartless; it is unpleasant for those who set out for a battle to retrace their steps fleeing before the enemy; unpleasant the friendship of the evil-minded.

ய. கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா
வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா
வண்மை யிலாளர் வனப்பின்னா வாங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

10. To drunkards, an ancient city without a toddy shop is unpleasant; absence of donors is unpleasant to beggars; the beauty of the miserly is unpleasant; unpleasant the riding of a horse without a saddle.

கக. பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னா
அருளில்லார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

11. To recite poetry before those, who understand not the meaning of words is unpleasant; unpleasant to walk along a dark and narrow path, alone; unpleasant to seek the ungracious; unpleasant too the desire of the destitute to give away gifts.

(தொடரும்)

புதுக்கவி—Original Poetry

நடுகல்

[வித்துவான் திரு. இலந்தைச் சாம்பசிவன்]

ஒரு வீரன் அடக்கம்

1. முரசமும் முழங்க வில்லை
 முன்னொரு வார்த்தை யில்லை
 விரைவுடன் கொண்டு சென்றே
 வீரனைப் புதைப்பான் புக்கார்
 பரவிடும் வீரர் தாமும்
 பகர்வெடி வெடித்தா ரில்லை
 கரைசெய வரிய துக்கக்
 கலக்கமே மிகுந்து நிற்க ;

2. இருளுறு வேளை தன்னில்
 இசைபெறு வீரன் தன்னை
 மருள்தரு மிருளை நீக்கு
 மீனொளி வானிற் காண
 நிரைதரு வீரர் சூழ
 நிலவொளி மங்கித் தோன்றப்
 புரையில்கை விளக்கும் மங்க
 வீரனைப் புதைப்பான் புக்கார்.

3. இசைபெறு வீரன் தன்னை
 இலங்கிழை யாடை தன்னால்
 நசையுட னணிசெய் தாங்கே
 நட்பினைக் காட்டி னாரில்
 திசைபுக ழிசையே சூழ்ந்து
 திகழ்ந்திட வவன்றன் மேனி
 விசையுட னெடுத்துச் சென்று
 வீரனைப் புதைப்பான் புக்கார்.

4. அருஞ்சமர் முடிந்த வாற்று
 லருங்கிளைப் பாற்றிக் கொள்வா
 னிரும்புவி யதன்மேல் வீழ்ந்தே
 இறந்தவன் கிடந்தான் மன்னோ !

பெரும்புகழ் படைத்த வீரன்
பிறங்குநன் முகத்தைக் காணு
வரும்பெற லன்பு பூண்ட
வனைவரு மூக ரானர்.

5. மனங்கரைந் துருக வீரர்
வாய்மொழி புகன்ரு ரில்லை
குணங்களிற் சிறந்த வீரன்
குவலயம் போற்ற மாய்ந்தான்
சினங்கெழு பகைவர் தாக்குஞ்
செய்தியை நினைந்து வீரர்
மனங்கவன் றுரையா நின்ருர்
மாற்றலர் சூழ்ச்சி யாய்ந்தே.

6. கடவுளைத் தொழுதா ரல்லர்;
கல்விடைப் படுத்த வீரன்
அடலுறு செயலைக் கண்டும்
அணிந்துரை நிகழ்த்தி னுரில்
உடலெலாம் நடுங்க வீரற்
குறுகுழி தோண்டி; வீரன்
உடலினைப் புதைத்தா ருண்மை
யுறுபுகழ் புதைத்தா ரல்லர்.

7. புவிதொடு குழியே பாயல்;
புவிபுகழ் இசையே ஆடை;
கவிபல கழறு வாரும்
கரைந்துவாய் குழற நின்ருர்
புவியினிற் ரேன்றி வீரன்
புகழினைப் பரப்பி மீண்டும்
புவியினிற் புதைந்தா னன்றே
புல்லுடம் பழிவு காட்டி.

8. வீரனைப் பயந்த தாயும்
விழிமலர் சிவப்ப நைந்து "நல்
வீரனைப் பயந்தேன் இன்றே
வீறுபெற் றுயர்ந்தே" னென்று

சீர்பெறு மார்பிற் றைத்த
செஞ்சரங் கண்டின் புற்றே
ஆர்தரு மாவல் பொங்க
வணைத்துபா லீந்தா ளன்றே.

9. அரசனும் வந்து நின்ருன்
அமைச்சரும் வந்து நின்ருர்
வரிசையாய் வீரர் நிற்க
வந்தனள் வீர னில்லாள்
விரிகுழல் சோகங் காட்ட
விழிக்கணீர் வடிக்க விம்மித்
தரைமிசை கிடக்கும் வீரன்
றணையனைத் தேங்கி னுளால்.

10. யாவரும் புலம்ப ; வீரன்
எடுத்தநற் குழியிற் றாங்கச்
சாவினைத் தவிர்ப்பா ரில்லை
தாணியி லென்று சாற்றி
ஓவிய மஃஇய வீரன்
உருவினைக் கல்லிற் செய்தே
மேவிய புகழ்பொறித் தாங்கே
மேம்பட நாட்டிப் போந்தார்.

11. எலும்பொடு நரம்பு மேதை
யிரத்தமுஞ் சேர்ந்த யாக்கை
புலம்பொடு குழியிற் போகும்
புன்மையை வெறுத்த வாபோல்
நிலம்புகழ் கீர்த்தி நிற்க
நெடிதுநா ளுழைத்த வீரன்
நிலந்தனி லோய்வு கொள்ள
நீத்தவர் வந்தா ரன்றே.

12. 'நடுகல்' பெற்றுயர் நற்புகழ் வீரனும்
தொடுக டற்புவி தொழப்பெறு தெய்வமாய்
வடுவி லாதவர் வணங்கியே வாழ்த்திட
நடுகல் கொண்டுமே நற்பெயர் நாட்டினன்.

வரலாற்றுப் பகுதி:
History & Biography.

உ

சிவமயம்

அறிவுநூற் புலவர் (Professor of Philosophy)

ராய்பகதூர் P. சுந்தரம்பிள்ளை (எம்.ஏ.) அவர்கள்

வரலாற்றுச் சுருக்கம்

நீர்வளம் நிலவளஞ் செறிந்த சேரநாடாகிய திருவிதாங்கூரைச் சேர்ந்தது துறைமுகப் பட்டினமாகிய ஆலப்புழை என்னும் ஊர். இவ்வூரில், வேளாளர் மரபில் திருவாளர் சுந்தரம்பிள்ளை யவர்கள் கி. பி. 1855-ம் ஆண்டு (1030 M.E.) பங்குனித் திங்கள் 28-ம் நாள் பிறந்தனர். இவர் தந்தையார், பெருமாள் பிள்ளை என்னும் இயற் பெயர் வாய்ந்தவர்; ஒரு பெரிய துணி வணிகர். இவர் மிகுந்த கடவுட் பற்றும் நுட்பமான அறிவும் அமையப் பெற்றவர்; தேவாரம், திருவாசகம், திருக்குறள், திருவிளையாடற் புராணம் முதலிய அருட்பெரு நூல்களை நெட்டுருச் செய்து சொல்லுந் திறமுடையவர். மாடத்தி என்பது இவர்தம் மனைவியார் பெயர். தங்கட்கு நெடுங்காலம் பிள்ளைப் பேறில்லா திருந்தமையால் தாய் தந்தைய ரிருவரும் மிக வருந்தினார்கள். மதுரைமா நகரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் தம் குலதெய்வமாகிய சோமசுந்தரக் கடவுளை நோக்கித் தவங் கிடந்தனர். அத் தவத்தின் பயனாகச் சில காலத்தில் ஓர் அழகான ஆண்மகவு இவர்கட்குப் பிறந்தது. இம் மகவுக்குச் சுந்தரம் என்னும் அப்பிரானது திருப்பெயரை அவர்கள் இட்டு வழங்கிவந்தனர்.

பெற்றோர்கள் இச்சிறு மகவை மிக அருமையாகப் பாராட்டி வளர்த்தார்கள். குழவிப் பருவம் நீங்கிப் பிள்ளைமைப்பருவம் அடைந்து ஐந்து ஆண்டு நிரம்பியதும், இவரை, இவர் தந்தையார்

தமிழ்க்கல்வி கற்க ஆலப்புழையில் உள்ள ஒரு பள்ளியில் வைத்தனர். பள்ளிக்கூடத்திற் பயிலும்போதே, இவர் தந்தையார் இவருக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறிவிளக்கம் முதலிய நீதி நூல்களையும், தேவாரம், திருவாசகம் முதலிய அருட் பாடல்களையும், திருக்குறள் முதலிய அறிவுப் பெரு நூல்களையும் ஒழுங்காகக் கற்பித்து வந்தனர். இதன் பயனாக இவர் தமது பன்னிரண்டாம் ஆண்டிலேயே தாய்மொழியாகிய தமிழ்மொழியிற் பேசவும் எழுதவும் வல்லுநராயினர். பின், ஆலப்புழையிற் புதிதாக அமைக்கப்பட்ட ஆங்கிலக் கல்விச்சாலையில் ஆங்கிலங் கற்கத் தொடங்கி (Pre - Entrance) பிரவேசத் தேர்ச்சிப் படிப்புவரை கல்விகற்றனர். அக்காலத்தில் அக்கல்விச்சாலைத் தலைவராயிருந்த மிஸ்டர் பீல் (Mr. Peel) என்னுந் துரைமகனார் பிள்ளையவர்களுடைய அறிவு நுட்பத்தையுஞ் சுறுசுறுப்பையும் ஆராய்ச்சி யறிவையுங் கண்டு வியந்து, இவர் பின்வாழ்க்கையில் பெரும்புகழ் எய்துவர் என்று பலமுறையும் பலரிடத்துங் கூறியுள்ளார்.

அதன் பின்னர், இவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியிற் சேர்ந்து உயர்தரக் கல்வி பயிலப்புகுந்தனர். அவ் வாண்டில் பத்தாவது வகுப்பில் இவர் முதல்வகுப்பில் முதலாவதாகத் தேர்வு பெற்றனர். அதனால், அரசியலார் இவருக்குத் திங்கள்தோறும் எட்டு ரூபாய் உதவிப்பணங் கொடுத்து வந்தனர். இவ் வுதவித் தொகை இவருக்கு (B.A.) பி. ஏ. தேர்வு முடிவுவரை கொடுக்கப் பெற்று வந்தது. இவர் ஒவ்வொரு வகுப்பிலுந் திறமையாகக் கல்விகற்று வந்தனர். இவருடைய கல்வித் திறமையினையும், கூர்த்த மதியினையுங் கண்ட கல்லூரி யாசிரியர்கள் இவர்பாற் பேரன்பு பூண்டனர்.

இவர், 1876 ஆ. ஆண்டில், திருவனந்தபுரத்தில் முதன்மையாகவும், சென்னை மாகாணத்தில் நான்காவதாகவும் பி. ஏ. தேர்வு தேறினர். இவர் மாணவராயிருந்த பொழுது, தம் தாய்மொழியாகிய தமிழ் மொழியைப் பயில்வதிலும், அறிவு நூல்களை ஆராய்வதிலும் அவாமிக்குடையராய் விளங்கினர். பி. ஏ. தேறியதும் இவர் கல்வித் திறமையறிந்த மிஸ்டர் ராஸ் (Mr. Ross) என்னுங் கல்லூரித்தலைவர், இவரை அக் கல்லூரியிலேயே எப். ஏ., பி. ஏ. வகுப்புக்களுக்கு வரலாற்று நூலும் (History), பி. ஏ. முதல்

வகுப்புக்கு அறிவு நூலுங் (Philosophy) கற்பிக்கும் ஆசிரியராக அமர்த்தினர். இவர் மாணவர்கட்குக் கல்வி கற்பிப்பதிற் றிறமை மிக்கவராக விளங்கினர். இவர் கல்வி கற்பிக்கும்பொழுது, மாணவர்கள் இவரது விரிவுரையிற் பெரிதும் ஈடுபட்டிருந்து கேட்டு மகிழ்வார்கள். ஆசிரியர்வேலையில் அமர்ந்தபின், இவர் தம் இருபத்தோராம் ஆண்டில் (1877-ஆம் ஆண்டு தைத்திங்கள்) நற்பண்புகள் நிரம்பிய சிவகாமி என்னும் பெண்ணரசியை மணந்து இல்லறவாழ்க்கை நடத்தி வந்தனர்.

அக்காலத்தில், சென்னைக் கல்வித்துறைத் தலைவராயிருந்த டாக்டர் டன்கன் (Dr. Duncan) என்னுந் துரைமகனர், திருவனந்தபுரம் அரசர் கல்லூரித் தலைவர் (மிஸ்டர்) ராஸ் (Mr. Ross) துரையவர்களைத் திருநெல்வேலி ஆங்கிலத்தமிழ்க் கல்விச்சாலைக்குத் தக்க ஒரு தலைவரைத் தெரிந்து அறிவிக்கும்படி கூறினர். இதுகேட்ட ராஸ் துரையவர்கள் சுந்தரம்பிள்ளையவர்களே அவ் வேலைக்குத் தக்கவரெனக் குறிப்பிட்டனர். அவ்வாறு அவர் குறிப்பிடவும், கல்வித்துறைத் தலைவரவர்கள் 1877-ம் ஆண்டிறுதியில், திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச்சாலைக்குச் சுந்தரம்பிள்ளையவர்களைத் தலைவராக அமர்த்தினர்கள். இவர் தலைவராயமர்ந்து அக் கல்விச் சாலையை மிக்க திறமையுடன் நடத்திவந்தார். இவர் அங்குச் செய்த பெருமுயற்சியின் பயனாகப் பத்தாவதுவகுப்பு வரையிருந்த அக்கல்விச்சாலை எப். ஏ. (F.A.) வகுப்பமைந்த இரண்டாவது வகுப்புக் கல்லூரி (Hindu College) யாக மாறியது.

இவர் திருநெல்வேலியி லிருந்தபொழுது, கோடகநல்லூர் உயர்திரு. சுந்தரசுவாமிக ளென்னும் பெரியாரைக் கண்டு, அவரொடு பழகி, அவரது தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு அவருக்கு மாணவராயினர். இன்னும், பிள்ளையவர்கள் தம் ஆசிரியரிடம் சமயநூல்கள் பல கற்று, அவைகளில் அறிவு நிரம்பப் பெற்றார். இக்காலத்திற்றான் இவர், மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் என்னும் அரிய நூல்களை எழுதத் தொடங்கினர். இவர் மனோன்மணீயம் என்னும் அரிய தமிழ் நாடகநூலை யியற்றி, அந் நூலின் சிறப்புப்பாயிரத்தில் "தமிழ்த்தெய்வ வணக்க"ங் கூறி, அதில் தமிழ்மொழியின் சிறப்பை மிக அழகுபெற எடுத்துக் காட்டியிருக்கின்றார். இவர் பாடியிருக்கின்ற அச் சில பாக்களி

ஞலேயே இவர் செய்யுளமைக்குந் திறமை மிக்கவரொன்பது நன்கு புலனும். தமிழ்த்தெய்வ வணக்கப் பாக்கள் சிலவே யாயி னும், அவை பொருட் செறிவும் இன்சுவையும் பொருந்தி மிளிர் கின்றன. இவர், தம் ஆசிரியரிடத்து வைத்திருந்த பெரும் பற்றை யுஞ் செய்ந்நன்றியறிதலையுங் காட்டும்பொருட்டு, மனேன் மணீயத்தில் தம் ஆசிரியர் சுந்தரமுனிவரை ஒரு சிறந்த நாடக உறுப்பாக அமைத்திருக்கின்ருர். இவருடைய கல்வித் திற மையை யறிய விரும்புவோர் இவரது அரும்பெரு நூலாகிய மனேன்மணீயத்தைப் பயின்றறிதல் ஒன்றே போதும். இக் காலத்தில் இவர்தம் ஆசிரியர் சுந்தர முனிவரியற்றிய "நிஜானந்த விலாசம்" என்னும் நூலே இவரும் இவர்தம் நண்பர் திரு. மாவடி சிதம்பரம் பிள்ளையவர்களுமாக அச்சிட்டு வெளியிட்டார்கள்.

1878-ம் ஆண்டு மாசித்திங்கள், இவர்தம் அருமை அன்னே யார் திருநெல்வேலியில் சிவபிரான்றிருவடிநீழ லெய்தினர். ஆக லால், இவர்தம் தந்தையாரைப் பேணும் பொறுப்பு இவர்க்கு இயல்பாகவே அமைந்துவிட்டது. 'தந்தை தாய்ப் பேண்' என்று ஔவைப் பிராட்டியார் கூறிய முதுமொழிக்கிணங்க, இவர் தம் பெற்ருேரிடத்தில் பேரன்புவைத்து ஒழுகிவந்தனர். புறக்கண்ணுற் காணப்படுந் தாய்தந்தையரிடத்து வைக்கும் அன்பே, அகக்கண் ணுற் காணப்படும் கடவுளிடத்துக் காட்டும் அன்புக்கு அடிப்படை யென்பதை இவர் நன்குணர்ந்தவர். தம் ஆசிரியத் தொழிலி லிருந்து வரும் ஊதியம் முழுவதையுமே, தம் அருமைத் தந்தை யிடங் கொடுத்துத் தம் சிறு செலவுகளுக்குக்கூடத் தந்தையிடங் கேட்டுத்தொகை பெறுவது இவர் வழக்கம். இவருடைய ஆங்கிலப் படிப்பானது, பண்டைத்தமிழர் வழக்கத்திற்கிணங்க, இவர் தம் பெற்ருேரிடங் காட்டி வந்த வணக்கத்தையும் பணிவையும் ஒரு சிறிதுங் குறைக்கக் காரணமாயிருக்கவில்லை.

1879-ம் ஆண்டில், திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் சிறந்த அறிவுநூற்புலவராயிருந்த டாக்டர் ஹார்வி(Dr. Harvey) துரை யவர்கள் தம் தாய்நாடு செல்லும்போது, நமது சுந்தரம்பிள்ளை யவர்களைத் தாமிருந்த வேலையில் அமர்த்திச் சென் றனர். அதன்பின், 1880-ம் ஆண்டில், இவர் எம். ஏ. (M.A.) தேர்வு பெற்ருர். இக்காலத்தில் இவர், தம் ஆசிரியத் தொழிலேச் செவ்வனே நடத்தி வந்ததுமன்றி, தமிழிலக்கியவளர்ச்

சிக்கான உழைப்பிலும் தலைசிறந்து நின்றார். இவர் திருநெல்வேலியிலிருந்தகாலை, எழுதத் தொடங்கிய மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் என்னும் நூல்களைச் செவ்வனே எழுதி முடித்தனர். திருவிதாங்கோட்டின் பல பகுதிகளிலுமுள்ள பழைய திருக்கோயில்களிற் பாழடைந்து பாதுகாப்பற்றுக் கிடந்த கல்வெட்டுக்களைப் பிள்ளையவர்கள் தமது பொருட் செலவிலேயே ஆராயத் தொடங்கினர். (தொடரும்)

குறிப்பு

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின்

ஐம்பதாவது ஆண்டு நிறைவுப் பொன்விழா

நிகழ் 1933ஆ டிசம்பர்மீ 24, 25-ஆம் (மார்கழித் திங்கள் 10, 11-ஆம்) நாட்களில் ஷை விழா மகிபாலன்பட்டி சைவத் திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். கோயமுத்தூர் வழக்கறிஞர் சைவத் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., F.M.U. அவர்களால் விழா மகாநாடு திறந்து வைக்கப்பெறும்,

ஷை முதலியாரவர்களால் ஆளுடைய பிள்ளையார் அருள் மொழிகள், வாகீசர் காட்டிய வழி, ஆவினிப்பட்டி சிவஸ்ரீ. வ. மு. இரத்தினேஸ்வரய்யரவர்களால் சிவ வழிபாடு, சைவத் திருவாளர்கள் சென்னை மயிலை. சுப்பிரமணிய முதலியாரவர்களால் ஆலவாயிலான் பாலதாயினர், மேலைச்சிவபுரி மு. அருணசலம் பிள்ளை யவர்களால் திருக்கோவையார், தோமங்கலம் ஆசிரியர் அ. வரதநஞ்சையபிள்ளை அவர்களால் பதியும் பசுவும், ஐந்தொழில் நடனம், நாகர்கோவில் K. ஆறுமுகம்பிள்ளை யவர்களால் கடவுள் ஒருவரே, சிவகதி விளைவு என்னும் சொற்பொழிவுகள் நடைபெறும்.

தென்னாற்காடு ஜில்லா 26-ம் நாள் கிழக்குமருதூர் மிராசுதார் சைவத்திருவாளர் தி. கு. கி. நாராயணசுவாமி நாயுடு அவர்கள் தலைமையில் 'சைவ இளைஞர் மகாநாடு'ம், சென்னை திருவளர் செல்வியார் மாணிக்கவாசக சரோஜினி அம்மையா ரவர்கள் தலைமையில் 'சைவ மங்கையர் மகாநாடு'ம், உயர்திரு. சுந்தர ஓதுவாமூர்த்தி அவர்களால் கதாப் பிரசங்கமும் நடைபெறும்.

விபரமான நிகழ்ச்சிக் குறிப்பு அமைச்சர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் அன்பர் மகாநாடு

கோல மழை பொழியக் குளிர்ந்திருக்கும் ஒரு நாட்டிற் பல்லாண்டு கோடை வறட்டிக் கொடுமை விளைக்குங்கால் வானம் சுரந்து சிறுதுளி சிதறினும் "வாய்ப்பு வாய்ப்பு" என்று கொள்ளாரோ மக்கள்? அற்றே, குறிஞ்சியும் முல்லையும் பாலையும் நெய்தலும் நெடுநல்வாடை வீச, பாமழை பொழிய, சிலம்பும் மேகலையும் வளையுங் குண்டலமும் அணிந்த மக்கள் ஏற்றமும் இறைவையும் போற்றலும் தூற்றலும் அழுகையும் தொழுகையும் பாட்டாய்ப் பாடித் தூய தமிழ்வளங் கொழித்த இத்தண்டமிழ் நாட்டில், வேற்றுமொழி யாட்சியும் மாற்றலர் சூழ்ச்சியும் கோடையாய் வறட்ட, தூய்மை மங்கிக் கொச்சை பொங்கும் கொடுமை மிகவிருக்கும் இக்காலத்தில் தமிழன்பர் மகாநாடு என்ற சிறு தூறல் தூறுவதும் நற்குறி யன்றோ? உண்மை நலங் கனிந்த தண்டமிழ்த் தொண்டர்களாம் மறைமலை யடிகளார் கா. சுப்பிரமணிய பிள்ளை M.A.,M.L., பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ச. சச்சிதானந்தம் பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய பெருமக்கள் ஆதரவு கொண்டு இம்மகாநாடு நடைபெறுவதாயின் இதைச் சிறுதூறல் என்னாது பெரும் பெயலென்றே கூறியிருப்போம். எனினும் இம்மகாநாடும் தமிழ்மொழியின் தூய்மைக்கும் தனிப் பெருமைக்கும் உலைவைக்காதும், தமிழ் மக்களின் ஒழுக்க மேம்பாட்டினைக் கீழறுக்காமலும் தமிழ்மொழி யாக்கத்திற்குத் தமிழ்மரபு சிதையாமல் வழிகோல முயலுமேல் நாட்டிற்கு நலம்பயக்க மேற்கொள்ளும் முயற்சிகளில் சிறந்ததொரு நன்முயற்சியாகவே இதனைக் கருதிப் போற்றுவோம்.

பிழையும் திருத்தமும்

செல்வி 2-வது பரலில் வெளிவந்த திருவாதவூர் என்னும் படங்கள் திருப்பரங்குன்றப் படங்களாம். ஆதலால் திருப்பரங்குன்றம் என்று திருத்திக் கொள்வார்களாக.



வைத்தியரத்னம்
C. S. முருகேச முதலியார்.